The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11–16.)

புத்தகம் 18. | ஜனவரி 1920. | இலக்கம் 1.

NEW YEAR GREETINGS

புது வருட சோபனம்

நமது "நல்ல ஆயன்" கையோப்ப நேயர்களுக்கும், அதன் நல்லிருப்பைக் கோரி அதற்கு விஷயதானம், பொருள்தானம் செய்கிறவர்களுக்கும், அதன் உபகாரிகள், அபிமானிகள் முதலானோர்களுக்கும் எம் மனமார்ந்த புது வருட சோபனங் கூறுகின்றோம். சரித்திர சம்பந்தமாய் நோக்குமிடத்து சென்ற 1919-ம் வருடம் தலைமுறை தலைமுறைக்கும் மறக்கப்படத்தக்கதன்று. ஈரிரண்டு வருடங்களுக்கதிகமாகவே நிகழ்ந்துவந்த நிஷ்டூர யுத்தம் சென்ற 1919-ம் வருடத்தில் முடிவாகி சமாதானம் ஏற்பட்டது நமக்குப் பெரும் பாக்கியமான விஷயம். யுத்தத்தினால் நம்மெல்லோருக்கும் விளைந்த கேடுபாடுகள் நம்மைவிட்ட கன்றபாடில்லையாயினும், சமாதான இராயரான நமதாண்டவர் *நல்ல ஆயன்* தொடங்கியுள்ள இவ்வருஷம் நமக்குப் பாக்கியகரமான வருஷமாயிருக்கும்படி கிருபைசெய்வாராக! அவர் உங்கள் எல்லோரையும் இகபர நன்மைகளால் நிறைப்பி, உங்களுக்கு விசேஷமாய் மனச்சமாதானத்தைத் தந்தருள்வாராக! நம்முடைய மெய்யான பாக்கியம் மனச்சமாதானத்திலே அடங்கியுள்ளதின் நிமித்தம் நாம் பாவத்தை விலக்கி புண்ணியத்தைச்செய்து அதன் சம்பாவனையாகிய சமாதானத்தை யடைந்து, இப்புது வருஷத்தை நமக்கு மங்களகரமான வருஷமாகச் செய்துகொள்ள முயல்வோமாக. இத்தகைய பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும்படி வருஷப்பிறப்பு நாளாகிய இன்று நாம் செய்யும் பரிசுத்த பூசைப்பலியை எல்லாம் வல்ல இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போம்.—சுபம்!

PEACE CELEBRATIONS.
சமாதானக் கொண்டாட்டங்கள்.

மிகவும் பயங்கரத்துக்குரிய ஐரோப்பா மகா யுத்தமானது சென்ற 1918ம் ஹு நவம்பர்மீ 11-ம் தேதியோடே முடிவடைந்துவிட்டபோதிலும், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எல்லா தேசத்தாருடையவும் சம்மதத்தின்பேரில் சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தி அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது சாமான்யமான காரியமல்ல. அதை முடிவுக்குக் கொண்டுவந்தபின்னிட்டே சமாதானத்தைக்கொண்டாடவேண்டுமென்ற நோக்கத்துடன் அக்கொண்டாட்டம் இதுகாறும் இவ்விந்தியா தேசத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்து, சென்ற டிசம்பர்மீ 13, 14, 15 தேதிகளில் அது கொண்டாடப்பட்டது. நாலைந்து வருஷமளவாக எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டிருந்த இந்தச் சமாதானம் நாடெங்கும் எவ்வாறு வரவேற்கப்பட்டுக் கொண்டாடப்பட்டதென்றும், விசேஷமாய் இத்தென்னிந்தியாவுக்குத் தலை நகரமாகிய இச்சென்னைமாநகரில் எவ்வாறு நிறைவேற்றப்பட்டதென்றும், அதிலும் நமது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களால் எத்தன்மையாய்க் கொண்டாடப்பட்டதென்றும் நமது நேயர்களுக்கு ஒருவாறு சங்க்ஷேபமாய்க் கூறு முனனே, சமாதானத்தைப்பற்றியே இரணடொரு வார்த்தை சொல்ல விரும்புகின்றோம்.

விஷயங்களை நன்கறியாத சிலர் சமாதானம் இன்னும் முடிவடையவில்லையென்றும், அது இனி முடிவடையவேபோவதில்லையென்றும, கடந்த யுத்தத்தைவிட அதிகக் கடூரமான யுத்தம் சீக்கிரத்தில் கிளம்பப்போகிறதெனறும் பொய்யான வதந்திகளைப் பரவச்செய்து, பாமர ஜனங்களுக்குள் பீதியை யுண்டுபண்ணுகிறதாகத் தெரியவருகிறது. அப்படிப்பட்ட எண்ணம் ஏதாவது நமது அன்பர்களுக்குள்ளிருக்குமானால், அதை அடியோடே அகற்றிவிடவேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ஒரு வருஷகாலமாய் இரு கட்சியைச்சேர்ந்த எல்லோராலும் விவரமாயும், பலமாயும் விவாதிக்கப்பட்டு, முக்கிய கட்சியார் அனைவராலும் கையொப்பமிடப்பட்டுப்போன உடன்படிக்கை இனி ரத்து செய்யப்படுமென்பது சுத்த அசம்பாவிதம். மன்னர்களால் முடிவுசெய்து முத்திரையிடப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தை பெல்ஜியம் விஷயத்தில் "ஒரு துண்டு காகிதம்" என்று சொல்லி அதை மீறி நடந்த கெய்ஸர் பட்ட பாடு ஜெகதலமுழுது மறிந்த விஷயமன்றோ? உடன்படிக்கையை நிராகரித்துச் சிறு தேசமாகிய பெல்ஜியத்தை நாசஞ்செய்த அநீத கொடுஞ் செயலைக் கண்டித்து நீதியை நிலைநாட்டவேண்டுமென்ற நோக்கம் ஒன்றல்லவோ, நேச கட்சியாரைப் பலப்படுத்தி வெற்றிபெறச்செய்தது? அப்படியிருக்க, மேற்கண்டபடி மகா முயற்சியுடன் எல்லா
விஷயங்களையும் சீர்தூக்கிப்பார்த்து வி
சன் போன்ற மகாப்பட்ட இராஜ தந்தி
நிபுணர்களால் முடிவு செய்யப்பட்
உடன்படிக்கையானது உடைபடுமெ
பது ஒரு கணமும் ஒப்பத்தக்க தல்ல
மேலும, நாற்பது வருஷகாலமாய் பகீர
பிரயத்தனங்கள் செய்து, இராணுவப
மமதையால் யுத்தந் தொடுத்து, லட்ச
கணக்காய் உடல் பொருளாவிகளை
தொலைத்து, இளைத்துக் களைத்து
சோர்ந்து தோல்வியடைந்துபோன ஜெ
மனியா இன்னொரு முறை இவ்வளவு சீ
கிரத்தில் யுத்த மாரம்பிக்கப்போகிறது
நாம் மேலே ஏற்கெனவே சொல்லியுள்ள
படி, அது அசமபாவிதம், அசம்பாவிதம

இராஜ தந்திர விஷயத்தில் அமி
வாதிகளென்று சொல்லப்பட்டவர்களி
அநேகர் சமாதானக் கொண்டாட்டத்தி
கலவாமலிருந்துவிட்டார்கள். இவர்க
சமாதானங் கொண்டாடாமற்போனத
குக் காரணமாக, சரியான சமாதானம்
படவில்லையென்றும், துருக்கி விஷ
யின்னம் ஒன்றும் முடிவு செய்ய
வில்லையெனறும், அஙகங்கே குழப்ப
நடந்துவருகின்றனவென்றும், ஆக இ
போன்ற வீண் சாக்குகளைச் சொ
றார்கள். "நொண்டிக் குதிரைக்கு ச
ண்டு சாக்கு" என்பதும்பால தங்க
சுயராஜ்ஜியபாரஞ் சித்திக்கவில்லையெ

162033

உட்காரணமிருக்க, அது சொத்தை இது சொத்தையென்று இராஜாங்கத்தாரோடு பிணங்கிக்கொண்டுவிட்டார்கள். உடன்படிக்கையானது இரு கட்சியாராலும் கையொப்பமிடப்பட்டுப்போயிற்று. பிரதான விஷயங்களில் ஒன்றுந் தகராரில்லை. சில்லறை விஷயங்களில் சிற்சில அபிப்பிராய பேதங்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவைகளைச் சரிப்படுத்த சர்வ தேச சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக் கமிட்டியாரிருக்கிறார்கள். எங்கேயோ, சில இடங்களில் குழப்பங்களிருக்கலாம். அவை எக்காலத்து முள்ளவைதான். துருக்கி விஷயமும் சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும். இவைகளுக்கும் சமாதானக் கொண்டாட்டத்துக்கும் என்ன சம்பந்தமோ விளங்கவில்லை!

அமிதவாதிகள் தவிர ஏனையோரெல்லோரும் அவரவர்களுக்குத் தக்கவாறு எல்லா ஊர்களிலும் சமாதானத்தைக் கொண்டாடினார்கள். சென்னையில் அநேகவிடங்களில் ஏழைகளுக்கு அன்னதானமும், வஸ்திரதானமும் செய்யப்பட்டன. விசேஷமாய், தங்கள் தேசத்துக்காக பிராணத்தியாகஞ்செய்து யுத்தத்தில் இறந்துபோன இராணுவவீரர்களின் குடும்பங்களுக்கு சம்பிரமமாக சாப்பாடு அளிக்கப்பட்டதோடு, அந்தந்த நபரின் அந்தஸ்துக்குத் தக்கவாறு நூறு, இருநூறு, மூந்நூறாக திரவிய தானமும் செய்யப்பட்டது. இவ்வாறு யுத்தத்தில் மாண்டவர்களின் வார்சுகளுக்காகக் கொடுக்கப்பட்ட தொகை 7 லட்சமாகும். வீதிகளும் வீடுகளும் விசேஷமாய் மவுண்ட் ரோடு என்னும் மலைச்சாலை முதலிய முக்கிய ரஸ்தாவிலுள்ள பிரபல வர்த்தகசாலைகளெல்லாம், பலவித தோரணங்களாலும், துவஜங்களாலும், புஷ்பங்களாலும், வெகு விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டன. இந்துக்கள், மகம்மதியர்கள், கிறீஸ்துவர்கள் முதலிய பற்பல மதத்தினர்களும் அவரவர்களுடையகோவில்களில் சமாதானமளித்த கடவுளுக்கு பூசை, நன்றியறிந்த தேவஸ்துதி, தூபதீப நைவேத்தியங்கள்செய்து ஆராதனை செய்தார்கள். ஆயினும்,

கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் செய்த கொண்டாட்டமே, சரியானதும், மேன்மையானதும், விமரிசையானதுமென்னத்தகும். டிசம்பர்மீ 14-ம் தேதி காலையில் சென்னையிலுள்ள எல்லாத் தேவாலயங்களிலும் விசேஷ நன்றியறிந்த பூசைப் பலி யாசீர்தனைகள் செய்யப்பட்டன. சென்னை அதிமேற்றிராசனக்கோவிலும் மயிலை மேற்றிராசனக்கோவிலிலும் முறையே மிக வந். சென்னை அதிமேற்றிராணியாரவர்களாலும் மயிலை மேற்றிராணியாரவர்களாலும் பெரிய பாட்டுப்பூசை செய்யப்பட்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது. திவ்யபூசைகளில் அந்தந்தக் கோவிலைச் சேர்ந்த கிறீஸ்துவர்களெல்லோரும் திவ்ய சற்பிரசாதமுட்கொண்டு அர்ச். பாப்பானவருடைய அபீஷ்டப்படி சென்ற நாலைந்து வருஷங்களாகப் பிரதிதினம் பூசைக்குப் பிறகு 3-பர., 3-பிரி. வேண்டிக் கேட்டுக்கொண்டபடிச் சமாதான மளித்த தயாபர சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்தினார்கள். இவைகளெல்லாம் அந்தந்தக் கோவில்களுக்குள் அயலார் கண்ணுக்குப் படாமற் செய்த காரியங்கள். ஆனால், இந்துக்கள் மகம்மதியர்கள் முதலிய இதர மதஸ்தினர்கள் கண்ணுக்குப்பட்டதும், கண்டவர்களெல்லோருடைய மனத்தையுங் கொள்ளிகரித்து அவர்களுக்குப் பிரமிப்பையும் பேராச்சரியத்தையும், கத்தோலிக்கர்கள் மட்டில் மதிப்பையும், நல்லெண்ணத்தையும் தந்ததும், மகா கம்பீரம் விமரிசை சிறப்புப் பொருந்தியதும், சென்னையில் இதுவரையில் எப்போதும் காணக்கிடையாததுமான விசேஷ வைபவம்

கத்தோலிக்கரின் சுற்றுப்பிரகாரம்.

சென்னை அதிமேற்றிராசனத்தையும் மயிலை மேற்றிராசனத்தையும் சேர்ந்த கிறீஸ்துவர்கள், ஐரோப்பியரும், இந்தியரும், ஸ்திரீகளும், புருஷர்களும், வாலரும் விருத்தருமாக 15,000த்துக் கதிகமான பேர்கள் அன்று மாலை 4-மணிக்கு, எற்கெனவே ஷை இரு மேற்றிராணிமார்கள் செய்திருந்த ஏற்பாட்டின்படி, சென்னைக் கோட்டைக்குத் தென் புறத்திலுள்ள மன்ரோ சிலை ஸ்தாபித்துள்ள மைதானத்திற் கூடினார்கள். அந்தந்தக் கோவில் கிறீஸ்துவர்கள் தங்கள் தங்கள் விசாரணைக் குருக்களைத் தலைமையாகக்கொண்டு,

தங்கள் தங்கள் தோளிற் கொடி, குருசு, மெழுகுவத்திகளுடன் முறையே குருவானவர், சீஷப்பிள்ளைகள், பாடகர்கள், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள், மாதிரீகள், புருஷர்களாக வரிசைக்கிரமமாக அவரவர்களுக்கு முன்னதாகக் குறிக்கப்பட்டிருந்த இடத்தில் நின்றார்கள். இவ்வாறு இவ்வைபவத்தில் சேர்ந்திருந்தவர்கள், பின்வரும் 19 கோயில்களைச்சேர்ந்த கிறீஸ்துவர்கள்: சென்னை அதிமேற்றிராசனக்கோவில், மயிலை மேற்றிராசனக்கோவில், மயிலை அர்ச். மாதரசுமாதாக்கோவில், காட்டுக்கோவில் என்னும் அர்ச். பிரகாசமாதாக் கோவில், இராயபுரம் அர்ச். இராயப்பர் கோவில், அர்ச். அந்தோனியார் கோவில், அர்ச். வியாகுலமாதாக்கோவில், அர்ச். ஆரோக்கியநாதர் கோவில், ஜார்ஜடவுன் அர்ச். சவேரியார் கோவில், அர்ச். அடைக்கலமாதாக்கோவில், அர்ச். மோட்ச இராக்கினிமாதாக்கோவில், அர்ச். அருளப்பர் கோவில், வேப்பேரி அர்ச். பிலவேந்திரர் கோவில், அர்ச். சூசையப்பர் கோவில், புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் கோவில், எழும்பூர் இருதய ஆண்டவர் கோவில், இராயப்பேட்டை காணிக்கை மாதாக்கோவில், நுங்கம்பாக்கம் அர்ச். தெரேசம்மாள் கோவில், பெரம்பூர் அர்ச். லூர்துமாதாக்கோவில். இத்தனைக்கோவில் கிறீஸ்துவர்கள் தங்கள் தங்கள் கொடி, குருசு முதலிய சின்னங்களுடன் குழுமியிருந்ததைப் பார்த்தவர்களுக்கு, ஒரு பெரிய மனுஷ சமுத்திரம்போல் காணப்பட்டது. இத்தனை யாயிரம் பேர் கூடியிருந்தாலும், அத்தொகையினருக்குள் சாதாரணமாயிருக்கக்கூடிய சந்தடியொன்றுமின்றி, மெத்த அமைதியாயிருந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. இது கத்தோலிக்கர்களின் இயற்கைச் சாந்தகுணத்தையும், 'மூப்பின்கீழ் அமைச்சல்' என்ற கீழ்ப்படிதலையும், பக்திப்பற்றுதலையும் நிதரிசனமாய்க் காண்பித்ததன்றோ?

இவ்வாறிருக்க, குறிக்கப்பட்டபடி மணி நாலரையானவுடன், மிகவும் வந். சென்னை அதிமேற்றிராணியாரவர்களும், சரி. வந். மயிலை மேற்றிராணியாரவர்களும், மோட்டார் ரத வாகனரூடாய் அங்கு வந்திறங்கினர். உடனே, கத்தோலிக்கர் தவிர மற்றையோரை அவ்விடத்து வர வொட்டாமற் றடுத்து ஜனங்களின் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வாலண்டியர் படைச்சேவகர்களில் ஒருவர், "சுற்றுப்பிரகாரம் ஆரம்பியுங்கள்" என்ற சொற்களைக் குறிப்பிக்கும் எக்காளம் ஊதவே ஏற்படுத்தப்பட்டிருந்த வரிசைக்கிரமப்படி முதல் சென்னை அதிமேற்றிராசனப் பங்கு கிறீஸ்துவர்களும், இரண்டாவது மயிலை மேற்றிராசனப் பங்கு கிறீஸ்துவர்களும், அவர்களுக்குப்பின் அதிமேற்றிராணியாரும் மேற்றிராணியாரும் நடந்துசெல்ல, இவர்களுக்குப்பின் சென்னையிலுள்ள மற்றப் பங்கு கிறீஸ்துவர்களும் அவரவர்களுடைய முறைப்படி ஒழுங்காய் ஆறு ஆறு பேராய் சுற்றுப்பிரகாரந் தொடங்கிப் பவனி புறப்பட்டார்கள்.

கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் சமாதானக் கொண்டாட்ட சம்பந்தமாய்ப் பவனி வரப்போகிறார்களென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த போலீஸ் கமிஷனர் உத்தரவுபிரகாரம், சென்னை வாலாஜா வாராவதியிலிருந்து ஐகோர்ட்டு வரையிலுமுள்ள பகிரங்க ரஸ்தாவில், அங்கங்கே இதற்கென்று பாரா வைக்கப்பட்டிருந்த போலீஸ் சிப்பந்திகளால், மோட்டார்வண்டி, கோச்சுவண்டி முதலிய வாகனங்கள் மாலை நாலு மணிமுதல் ஆறு மணிவரையிலும் போக்குவரவு செய்யாமல் நிறுத்தப்பட்டன. பாதசாரிகளும் ரஸ்தாவின் மத்தியில் நடக்க விடப்படவில்லை. ரஸ்தாவானது யாதோர் ஆடங்கமின்றி சுற்றுப்பிரகாரத்துக்கு யோக்கியமாம்படி நிசப்தமாக்கப்பட்டது. ஆகவே, கத்தோலிக்கர்கள், தங்கள் தங்கள் சபைக் கொடிகள், குருசு முதலிய சின்னங்களுடன் ஆடவரும் அரிவையரும் அணிவகுத்து மரியாதையாயும், பயபக்தியுடனும், ஜெபமாலை ஜெபித்துக்கொண்டும், இடையிடையே தேவ கீதங்களைப் பாடிக்கொண்டும் பவனி சென்ற காட்சியானது பாதையி னிருமருங்கிலும் போய்க்கொண்டிருந்த பாதசாரிகளை அங்கங்கே நிறுத்தித் திக்பிரமைகொள்ளச்செய்துவிட்டது. சுற்றுப்பிரகாரம் ஆரம்பித்த விடத்திற்கும் அது முடிவாகவேண்டியதான ஐகோர்ட்டு சிங்காரத்தோட்டத்துக்கும் இடையிலுள்ள ரஸ்தாவின் நிகளம் சுமார் அரை

மயில் தூரமிருக்கலாம். சுற்றுப்பிரகாரத்தின் முதல் அணி ஐகோர்ட்டுச் சிங்காரத் தோட்டத்தைத் தொட்டபோது மன்றோ சிலை மைதானத்திலிருந்த கத்தோலிக்கர்களில் பாதிகூட சரியாய்ப் புறப்படவில்லையென்றால், சுற்றுப்பிரகாரத்தில் சேர்ந்திருந்தவர்களின் தொகையையும், அதன் பெருமையையும்பற்றி இன்னும் விரிவாய்ச் சொல்லவேண்டுவதில்லையெனக் கருதுகிறோம். இத்தன்மையாய் நாலரை மணிக்குப் புறப்பட்டுச்சென்ற பவனி முழுதும் குறித்த விடத்திற்குப் போய்ச்சேர சுமார் மணி ஆறாயிற்று. அதன்பின் விக்கர் ஜெனரல் என்னும் சிரேஷ்ட குருவாகிய சரி. வந். கஸ் சுவாமிகளைத் தலைமையாகக் கொண்ட பல குருக்கள், சீஷப்பிள்ளைகள் முதலியோர் சேர்ந்த பரிவாரத்தால் அரமனைக்காரத் தெருவிலுள்ள அதிமேற்றிராசனக் கோவிலிலிருந்து மிகவும் ஸ்துதிக்கப்படத்தக்க தேவநற்கருணை தூபதீப புஷ்ப வாராதனைகளுடன் மிகப் பூச்சியமாய்க் கொண்டுவரப்பட்டு, அங்கு அதற்கென்று அதி நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்த சிங்காரப்பந்தருக்குள் தீப கோடிகளால் பிரகாசித்த பீடத்தின்மீது ஸ்தாபிக்கப்பட்டது. திவ்யசற்பிரசாத வருகைக்காக ஆவலுடன் காத்திருந்த விசுவாசிகள் அனைவரும், அதைக் கண்டதும் முழங்காற்படியிட்டுவணங்கி நமஸ்கரித்து நிற்க, அதிமேற்றிராணியாண்டவரவர்கள், அதற்கு தூபாராதனைசெய்து, "தேதேயும்" என்ற தோத்திரப் பாடலை ஆரம்பித்துக்கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து பாட்டுக்காரர்கள் பாடி முடித்தபின், உலகத்துக்குச் சமாதானத்தைக் கட்டளையிடக் கருணைபுரிந்த காருண்ய சர்வேசுரனுக்குத் தோத்திரமாகவும், யுத்தத்தில் மரித்தவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காகவும் 3-பர., 3-பிரி. வேண்டிக் கொள்வோமாகவென்று சங். மேயர் சுவாமிகள் பிரேரேபிக்க, அங்கு குழுமியிருந்த பதினையாயிரம் விசுவாசிகள் அனைவரும் ஏகோபித்து ஒரே வாக்காய் அவ்வரிய ஜெபங்களை ஜெபித்தார்கள். பிறகு, வழக்கம்போல் தேவநற்கருணை யாசீர்வாதத்துக்குமுன் பாடப்படுகிற பாட்டுகள் தோத்திரங்கள் பாடப்பட்டபின், அதிமேற்றிராணியாண்டவரவர்களால் தேவநற்கருணை யாசீர்வாதங் கொடுக்கப்பட்டது. அதன்பின் மறுபடியும் தேவநற்கருணை அதிமேற்றிராசனக்கோவிலுக்குச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுபோகப்பட்டு, அங்கு அதன் யதாஸ்தானத்தில் தூபதீபாராதனையுடன் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தன்மையாய் கத்தோலிக்கரின் சமாதானக் கொண்டாட்ட வைபவம் முற்றுப்பெற்றது. இதுவரையில் காணாத இவ்வரிய வைபவம் ஜனங்களின் மனத்தில் நெடு நாளைக்கு நிற்குமென்பதிற் சந்தேகமில்லை.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

IX

மோயீசன் கண்ட எரி செடி.

"மோயீசன் கண்டதும் வெந்துபோகாமல் எரிந்துகொண்டிருந்ததுமான செடி, ஓ! தேவதாயே, என்றுங் குன்றாத உமது கன்னிமைக்கு உவமானமன்றோ?" (மந்திரமாலை).

மோயீசன் எஜிப்துதேசத்தைவிட் டோடிப்போய் மாதியான் நாட்டை யடைந்தான். அங்கு ஆசாரியனாயிருந்த தமது மாமனுக்குப் பணிபுரிந்துவந்தான். ஆடுகளை மேய்ப்பதுவே யவனது அலுவல். ஒரு நாள் வனாந்தரத்தின் உட்புறத்தில் ஆடுகளையோட்டிக்கொண்டுபோகவே, தேவ காட்சிப் பர்வதமென் றழைக்கப்படும் ஹோரப் மலையடியிற் வந்தனன். அப்போது "ஆண்டவர் அவனுக்கு ஒரு செடி நடுவினின்று அக்கினிச்சுவாலை ரூபமாய்த் தரிசனமாயினர்." செடியானது வெந்துபோகாமல் எரிவதைக் கண்டான். ஆகையால் மோயீசன்: "நான் போய் செடியானது வெந்துபோகாத இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன்" என்றான். ஆனால் அவன் உற்றுப்பார்க்க வருவதை ஆண்டவர் கண்டு, செடியின் நடுவே நின்று "மோயீசா! மோயீசா!" என்று அவனைக் கூப்பிட அவன் "இதோ இருக்கின்றேன்" என்று மறுமொழி கூற, அவர்

"அண்டிவராதே! உன் பாதரட்சைகளைக் கழற்றிவிடு. ஏனெனில், நீ நிற்கின்ற ஸ்தலம் பரிசுத்த பூமி" என்றார். மீளவும் அவர் "உன் பிதாவின் தேவன், அபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் நாமே" என்றருளினார். மோயீசன் தேவனை நோக்கிப் பார்க்கத் துணியாமல் முகத்தை மூடிக்கொண்டனன். கர்த்தர் அவனைப் பார்த்து "எஜிப்தில் நமது பிரசைக்குண்டான உபத்திரவத்தையுங் கண்ணுற்றோம். வேலை விசாரணைக்காரருடைய கொடுமையின் நிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலையுஞ் செவியுற்றோம். நாம் அவர்களுடைய துயரத்தை அறிந்தமையால். அவர்களை எஜிப்தியர் கைகளினின்று மீட்டிரட்சிக்கவும் இந்தத் தேசத்திலிருந்து நல்ல விசாலமான தேசத்தில் பாலுந் தேனும் ஓடும் பூமியிற்கொண்டுபோய் சேர்க்கவும் இறங்கிவந்தோம்" என்றருளினார்.

ஆண்டவர் காணப்பட்ட இவ்விசித்திர செடியானது தேவதாய்க்கு உவமானமாயுளதென்று அர்ச்சியசிஷ்டவர்கள் பகருகின்றனர். அவர்களில் விசேஷித்தவர்கள் அர்ச். எபிபானியஸ், அர்ச். எபிரேம், அர்ச். தமசீன் அருளப்பர். அர்ச். அகுஸ்தீனுவார்கள். அவ்வாறு கொள்ளும்படிக்குச் சத்திய திருச்சபையுமே கற்பிக்கின்றது. ஏனெனில் தான் ஏற்படுத்திய மரியாயின் மந்திர மாலையில் "மோயீசன் கண்டதும் வெந்துபோகாமல் எரிந்துகொண்டிருந்ததுமான செடி, ஓ! தேவதாயே, என்றுங் குன்றா உமது கன்னிமைக்கு உவமானமன்றோ?" எனப் பாடுகின்றது.

1. செடியின் மத்தியில் நின்றார் தேவன். தேவ குமாரனும் சேசுநாதர் மரியாயினிடம் வீற்றிருந்தார். செடி எரிந்தும் அக்கினிச்சுவாலையால் வெந்துபோகவில்லை. மரியாய் மாதாவானாளாயினும் தன் கன்னிமையை யிழக்கவில்லை. பரிசுத்த மரியாய் சிறு வயதிலேயே கற்பெனும் வார்த்தைப்பாட்டோடு தன்னைக் கடவுளுக்குப் பரித்தியாகஞ் செய்திருந்தனளென்பது பாரம்பரை. ஆகவே, கபிரியேல் சம்மனசானவர் கன்னிமரியை யணுகி அவள் இரட்சகரின் மாதாவாகக் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதை விளம்பியபோது அவள் ஆச்சரியமுற்று, "அதெப்படியாகும்? நான் புருஷஸ்பரிச மறியாதவள்" என வினவினாள். தேவதூதன் அவளுக்கு மறுமொழியாக "இஸ்பிரீத்துசாந்துவானவர் உமதுமேல் எழுந்தருளிவருவார்; உந்நத கடவுளுடைய வல்லமை உமக்கு நிழலிடும்" என உரைத்தார். அவள் மெய்யாகவே கன்னிமையை யிழக்காது தேவ அற்புதச் செயலால் ஓர் குமாரனைப் பெறுவாளென்று விளக்கிக்காட்டினார் வானதூதன். பின்னர் மரியாய் "இதோ ஆண்டவருடைய அடிமையானவள், உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்று சொல்லி யிணங்கினாள். "இதோ! ஓர் கன்னிகை ஓர் குமாரனைப் பெறுவாள்" என்ற இசையாஸின் தீர்க்கதரிசனம் அன்று நிறைவேறினது. ஓர் கன்னியினிடமிருந்து குமாரன் பிறந்தார். எப்பேர்க்கொத்த குமாரனவர்! "உம்மிடத்திற் பிறக்கும் பரிசுத்தமானது சர்வேஸ்வரனுடைய சுதனென்னப்படும்." "கடவுள் இப்புவியில் மனுவாய்ப் பிறப்பதானால் ஓர் கன்னிகையினிடமிருந்தே ஜனனமாகவேண்டும். ஓர் கன்னிகை கர்ப்பந் தரிப்பதானால் கடவுளையே ஈன்றெடுக்கவேண்டும்" என அர்ச். பெர்நார்து வசனிக்கின்றார். இவ்வற்புத சம்பவத்தால் பிரமிப்படைந்து அர்ச். ஜெரோம் உரைப்பதாவது: "இயற்கையாற் கூடாத, வழக்கத்திற்கு விரோதமான, புத்தியறிவிற்கொப்பாத, மனித ஞானத்திற்கெட்டாத ஓர் சம்பவம்! பரத்தில் பிரமிப்பையும் இகத்தில் ஆச்சரியத்தையும், மோக்ஷ வாசிகளுக்கும் பூவாசிகளுக்குஞ் சொல்லொண்ணா அதிசயத்தையும் விளைவிக்குமோர் சம்பவம், கபிரியேல் சம்மனசால் கடவுள்பேரால் கன்னிமரியாய்க்குச்சொல்லப்பட்டது" சேசுக்கிறீஸ்துவானவரால் நிறைவேற்றப்பட்டது என்பதே. கன்னியாயிருப்பதும் மாதாவாயிருப்பதும் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான விஷயம். அப்படி ஒன்றித்திருப்பின் அது கடவுளது புதுமையே. கன்னிமரியாயினிடத்து ஆண்டவரது புதுமையாலேயே இவ்விரண்டும் ஒன்றித்திருக்கின்றன. இவ்வொற்றுமைப்பந்தனத்தைக் குறித்துத் திருச்சபை மந்திரமாலையில் "நித்தியமான அரசனை ஓர் கன்னிகை யீன்றெடுத்தாள். கன்னியாயிருக்கும் மகிமையோடு தாயாயிருக்கும் பாக்கியமுமுடையவள் அவள். இதற்குமுன் அவளைப்போன்றவளிருந்ததுமில்லை—இனிமேல் இருக்கப்போவதுமில்லை" எனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

2. கடவுள் தமது பிரஜைகளை எஜிப்தினடிமைத்தனத்தினின்று மீட்கப்போகிற சமயத்திலேதான் மோயீசனுக்கு இவ்வற்புதக் காட்சி தென்பட்டது. ஏனெனில், ஆண்டவர்

அவரைப் பார்த்துச் சொன்னதாவது : "எஜிப்தில் நமது பிரஜைக்குண்டான உபத்திரவத்தையுங் கண்ணுற்றோம்—வேலை விசாரணைக்காரருடைய கொடுமையின் நிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலையும் செவியுற்றோம். நாம் அவர்களது துயரத்தை அறிந்தமையால் அவர்களை எஜிப்தியர் கைகளினின்று மீட்டிரட்சிக்கவும் இந்தத் தேசத்திலிருந்து நல்ல விசாலமான தேசத்தில் பாலுந்தேனும் ஓடும் பூமியிற்கொண்டு சேர்க்கவும் இறங்கிவந்தோம்" என்பதுவே. இஸ்ராயேலர் எஜிப்தில் அடிமையாயிருந்தார்கள். மனுக்குலமோ பாவ விலங் கிடப்பட்டு பசாசுக்கடிமையாயிருந்தது. மனுமக்களின் பரிதாப நிலைமையைக் கர்த்தர் கண்ணுற்றார். அவர்களது பிரலாபத்தைக் கேட்டார். இஸ்ராயேலரை மீட்டதுபோல் மானிட சந்ததியையும் இரட்சிக்கப்போகின்றார். அதற்காக முற்காலங்களில் செய்ததுபோல் தீர்க்கதரிசிகளை யனுப்பவில்லை. அவர்தாமே தமது மகிமைச் சிம்மாசனத்தைவிட்டிறங்கிவருகின்றார். எரிச் செடியைப்போல் எரிந்து வேகாது—மாதாவாகியும் கன்னிமை குன்றாத பரிசுத்த மரியாயினின்றற்புதமா யுற்பவித்தார்.

3. செடியினின்று அக்கினிச்சுவாலைகள் கிளம்பின. மரியாயின் இருதயத்தில் தேவ அன்பு பற்றியெரிய பிறசிநேகக் கிரிகைகளெனுஞ் சுவாலைகள் நாலு பக்கமும் பரவி நின்றன. தேவ சிநேக நெருப்பு அவளிருதயத்தில் எரிந்தது. ஆனால் அதை வேகச்செய்யவில்லை. எப்போதுங் குறையாதும்—அவியாதும் எரிந்துகொண்டிருந்த நேச அக்கினியை தேவ அருள் மூட்டிக்கொண்டேயிருந்தது. மரியாயின் சீவியம் அன்பின் சீவியம். அவளது மரணம் அன்பின் பரவசமாம். மரியாய் தமது நேசப்பெருக்கால் நம்மைவிடச் சொல்லொண்ணுமடங்கு புண்ணியவதி. அவளுக்கும் நமக்கும் பாரதூரம். சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரமென்கலாம். அதைக் கடந்துசெல்ல நம்மாலியலாது. ஆயினும், சூரியன் பூமியிலிருந்து எவ்வளவு தூரம் அகன்றிருப்பினும், பூவாசிகளுக்குப் பிரகாசமும் உஷ்ணமுங் கொடுத்துதவுகின்றதன்றோ? அப்படியே மரியாயின் தேவ நேசம் மற்ற சிருஷ்டிகளிடத்திலுள்ளதைவிட அதிகமானதாயும், நம்மாலடையக்கூடாதவிதமானதாயு மிருந்தபோதிலும், அவற்றின் உக்கிரம சூடும், பிரகாசச் சுவாலையும் நம்மிருதயத்தின்கண்ணுள்ள குளிர்ச்சியைப் போக்கி அறிவின்மையை நீக்கிவிடும்.

4. கர்த்தர் மோயீசனுக்கு ஓர் பிரமாண்ட விருக்ஷத்தினின்று தோன்றவில்லை. ஆனால் தாழ்ந்த செடியின் மத்தியிலேயே தோன்றினார். அங்ஙனமே தேவ குமாரன் இப்பிரபஞ்சத்திலுள்ள அதியுன்னத மகத்தான அரசியினின்றுதிக்கவில்லை. ஆனால் தாழ்ச்சியுள்ளவளும் ஒருவருமறியாதவளுமான ஓர் கன்னிகையினிடமிருந்து பிறந்தார். மேன்மையுந் தாழ்மையும் மரியாயினிடம் எவ்வாறு ஒன்றுகூடித் தாண்டவமாடுகின்றன! "மரியாயே! நீர் பாக்கியம் பெற்றவள். ஏனெனில் உம்மிடம் தாழ்ச்சியுங் கன்னிமையும் ஒருங்கே யமைந்திருந்தன. அதுவோர் அற்புத கன்னிமையன்றோ. ஏனெனில் கர்ப்பந்தரித்தும் கன்னிமை குறையாது நிறைவடைந்தது. தாழ்ச்சியும் அதி மேலான தாழ்ச்சியன்றோ? ஏனெனில் கன்னித்தாயான மகிமையை யழிக்காது அதை அதிகரித்தது. மெய்யாகவே இணையிலாப் பாக்கியம்! ஏனெனில் அப்பாக்கியத்திலேயே தாழ்ச்சியுங் கன்னிமையும் பிரியாது ஒன்றுகூடியிருந்தன" என அர்ச். பெர்நார்து போற்றுகின்றார். "தேவனின் மகத்துவத்திற்கு, அவர் ஓர் கன்னிகையினிடத்து அற்புதமாய்ப் பிறப்பதே ஏற்றதாயிற்று. ஆகவே சிருஷ்டிகர் மனிதாவதாரமெடுத்துப் பிறப்பதற்கு உபகரணமாகத் தமது மகிமைக்குத் தகுந்தவளும் தமக்குகந்தவளுமான ஓர் தாயைத் தெரிந்துகொண்டார். நமமை பாவக் கறையினின்று, இரட்சிக்குமாறு பழுதற்ற கன்னிகையினின்று மாசில்லா துதிக்க விரும்பினார். சாந்தமுந் தாழ்ச்சியுமுள்ளவர்க்குத் தாயாயிருப்பவள் தாழ்ச்சியுள்ளவளாயிருக்கவேண்டுமெனச் சித்தங்கொண்டார். தேவமாதாவாகின்றவளின் சரீரம் பரிசுத்தமாயிருக்கவேண்டியே மரியாய்க்குக் கன்னிமையெனும் வரத்தை யளித்தார் கடவுள். மனதிற் பரிசுத்தமாயிருக்கத் தாழ்ச்சியுள்ளவளாயிருந்தாள்" என அர்ச். பெர்நார்து காரணங் கூறுகின்றார்.

5. மோயீசன் தூர நின்று எரிசெடியைக் கண்டவுடன் "நான் போய் இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பே"னென்றான். எரிசெடிக்கொப்பாய் நிற்குங் கன்னிமரியாயை நாம போய்ப் பார்க்கவேண்டாமோ? "ஓ! அதி பரிசுத்த கன்னிகையே! உமது காட்சியானது சம்மனசுக்களையும் பரவசப்படுத்துகின்றது! இதோ பார், மோக்ஷத்தில் ஓர் உன்னத அற்புதம்! சூரியனை ஆடையா யணிந்து கரங்களில் நித்திய ஒளியை ஏந்தி நிற்கின்றாள் ஓர் ஸ்திரீ! ஆச்சரி

யத்துக்குரிய ஓர் புதுமை! ஓர் கன்னிகை தேவ சுதனைக்கொண்டிருக்கின்றாள்! அதிசயமான ஓர் சம்பவம்! சம்மனசுக்களின் அரசன் மரியாயின் மகனானார்!" என்று அர்ச். எபிபானியுஸ் வாழ்த்துகின்றார். நாமும் அக்காட்சியைக்காண ஆவல்கொள்ளுவோமாக. தேவமாதாவை யண்டிப்போவோம். துன்பமும் துயரமும் 'பட்டகாலிலே படும்' என்றாற்போல் ஒன்றன்பின் ஒன்றாய் விளையக்கூடும். எவ்வித கஷ்ட நஷ்டங்கள் நேரிடினும் அற்புதக் காட்சியாகிய கன்னிமரியாயைப் பார்ப்போம். அவ்வம்மணியின் அடைக்கலம் புகுவோம். எல்லாம் வெயில் முகங்கண்ட பனிபோல் கறைந்துபோகும்.

(தொடரும்.)

M. S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

6-ம் அதிகாரம்.

மனேக்கியர்களின் பதிதமதம் கிறீஸ்து வேதத்தைப் பரீட்சைசெய்து, தன்னிடம் தாழ்ச்சியும் பரிசுத்தத்தனமும் இல்லாத குறையால், அதன் போதனையைக் கண்டுபிடிக்க இயலாமல், அகுஸ்தீன் மனேக்கிய பிரிவினையில் சேருதல்—அர்ச். மோனிக்கம்மாளுடைய அதிசயத்துக்குரிய நடத்தை—கர்த்தர் அவளுக்காறுதலளிக்கிறார்—அவ்வளவு அழுகைப்பிரலாபத்துடன் அவருக்காக அவள் கர்த்தரை நோக்கி மன்றாடிவர, அவர் சேதமடைவது கூடாத காரியம்.

(கி. அ. 374—377.)

அக்காலத்தில் ஒரு போதனையிருந்தது. அப்போதனைக்கு அநேகர் வசியமானார்கள். அக்காலத்திலேயே அப்போதனை பழமையடைந்திருந்தபோதிலும், அதன் உற்பவம் எக்காலத்திலிருந்தென்று தெரியவில்லை. அலெக்சாந்தரும், உரோமர்களும், ஆசியா கண்டத்தைப் பிடிக்கப்போனபொழுது, அவர்களைப் பின்தொடர்ந்து சென்றவர்கள் போதித்த கிரேக்கு தத்துவ சாஸ்திரப் போதனைகளின் சாரமும், பார்சி, கல்தேய, எகிப்திய போதனைகளின் சாரமும் ஒருங்கு சேர்ந்த ஒரு நவீன போதனை அது வென்னத்தகும். அப்போதனையை முதலில் போதித்தவர்கள் யாரென்று சொல்வது அரிது. அதைப்பற்றி நமக்கு அக்கரையுமில்லை. சுமார் 2-ம் நூற்றாண்டில், சீத்தியன் என்னும் ஒரு அரபியன், தனக்கு ஒழிந்த நேரங்களில், அப்போதனை யடங்கிய புஸ்தகம் ஒன்றை எழுதி பின்னுக்கு அப்புஸ்தகத்தினால் என்ன ஆகுமென்று சற்றேனும் அறியாதவனாய், அதைத் தெரெபின்தென்னும் தன் சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டான். இவன் அப்போதனையைப் பிரசித்தப்படுத்த முயன்றான். ஆனால் அம்முயற்சி பயனற்றுப்போகவே, தன்னை விசுவசித்த ஒரேயொரு ஐஸ்வரியமுள்ள விதவைக்கு, அப்புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டான். அவளுக்குப் புத்திர சந்தானமில்லாத குறைவால், மனேக் என்னும் ஒரு அடிமையை விலைக்கு வாங்கி, தனது தத்து பிள்ளையாக வளர்த்து அவனுக்குக் கல்வி கற்பித்துவந்தாள். அவள் செத்தபோது, அவன் அந்தப் புஸ்தகத்திற்கு உரியவனானான்.

இச்சரிதை சம்பவித்த அக்காலத்தில் அப்புஸ்தகம் சுமார் நூறு வருஷம் பழமையுள்ளதாயிருந்தது. அதில் அடங்கிய போதனையோ அப்போது இன்னம் பிரசித்தியடைந்திருந்ததில்லை. மனேக்கிய போதனையின் உற்பத்தியைப்பற்றிச் சாதாரணமாய் ஜனங்கள் சொல்லுவது இவ்வளவே. இது மெய்யோ, பொய்யோ, நமக்கென்ன கவலை? உண்மையேதெனில்: மனேக் என்பவனுக்கு அவ்விதவையிடமிருந்து அப்புஸ்தகம் கிடைத்ததோ, அல்லது அவனே அதை தன் சுயபுத்தியைக்கொண்டு எழுதினானோ வென்பது சந்தேகம். ஆனால் அவன் பெயரைக் கொண்டிருக்கும் அப்போதனையை முதன்முதல் போதித்தவன் அவனே. அதன் கருத்துகளை ஒரு ஒழுங்குப்படுத்தி, இரண்டு விதமாக அதைப் பிரசங்கித்தான். முதல் விதம், முழுதும் அக்கியானத்தைச் சார்ந்தது. அதைச் கைப்பற்றினார் யாருமில்லை. இது பிறகு மனேக்குக்குத் தெரியவந்தது. அதேதெனில், ஜனங்கள் கிறீஸ்து வேதசாரத்தில் தோய்ந்திருந்தபடியால், அதற்கு ஒத்திருக்கும்படியான சிற்சில போதனைகள் தன் புதிய மதத்தில் இல்லாவிட்டால் அது கடைத்தேறாதென்பதே. ஆகையால், அவன் கிறீஸ்து

வேதாகமங்களை வாசித்து, தந்திரமான சூழ்ச்சியுடன், கிழக்கு ராச்சிய மதங்களின் போதனைகளும் மேற்கு ராச்சிய மதங்களின் போதனைகளும் அடங்கப்பெற்ற ஒரு சிறந்த நவீன மதத்தை ஏற்படுத்தினான். அந்நூதன மதத்தை யாவரும் எவ்வளவாய்த்தான் நிராகரித்துக் கண்டனைசெய்த போதிலும், அது முன்னையவிட செழிப்பாகவே ஓங்கி வளர்ந்துவந்தது. சக்கரவர்த்திகள் திரண்டு கூடி அதனை நாசமாக்க எத்தனித்தும், அவர்களால் கூடாமற்போய்விட்டது. மத்திய யுகங்களில், கிறீஸ்து வேதம் செழுத்தோங்கியிருந்த காலையில் இம்மதம் திரும்பத்தோன்றி, கிறீஸ்துவ ஐரோப்பாவையே முழுதும் நாசமாக்குவதாயிருந்து, பிறகு ஏதோ மறைந்துபோனபோதிலும், அது முற்றிலும் ஒழிந்துபோகவில்லை போலும். ஏனெனில், இக்காலத்தில் மேனக் என்பவனுடைய போதனையை மூலகாரணமாகக் கொண்டு, அநேக இரகசியக் கூட்டங்கள் உலகத்தில் இல்லையென்று நமக்குக் கண்டிப்பாய்ச் சொல்லக்கூடியவர் யார்? இப்பதித மத போதனையானது நியாயத்திற்கொவ்வாத போதனையென்று சொல்லி யாரும் அதைச் சன்மானித்ததில்லை.

அப்படிப்பட்ட மதத்தில் அகுஸ்தீன் புத்திகெட்டுச் சேர்ந்தார். ஒரு விஷயத்தில் பார்த்தால், அது நியாயத்திற்கொவ்வாத மதமே. அம்மதம் போதிப்பது யாதெனில், இரண்டு மூல வஸ்துக்கள் உண்டு. ஒன்று நன்மைக்கடுத்தது. மற்றொன்று தின்மையைச் சார்ந்தது. இரண்டு தேவர்கள் உண்டு. ஒருத்தரைக்கண்டால் மற்றொருத்தருக்கு ஆகாது. இருவரும் பிராண சத்துருக்கள். ஒருவர் மற்றொருவரை அனுசரித்துக் கொண்டு நடக்கமாட்டார். அல்லது ஒருவரையொருவர் வென்று ஜெயிக்கமாட்டார் என்பவையே. இதைவிட நகைப்புக்குரிய போதனை வேறியாதுண்டு? மனிதனை நன்மைக்குத் தூண்டும் ஆத்துமம் ஒன்று. தின்மைக்குத் தூண்டும் ஆத்துமம் ஒன்று, ஆக இரண்டு ஆத்துமங்கள் அவனுக்குண்டென்று போதிக்கும் போதனையைவிட பைத்தியமுள்ளது வேறு எது? இது பைத்தியமுள்ளதுமாத்திரமன்றி, துன்மார்க்கத்திற்குச் சார்புள்ளதென்றும் சொல்லலாகும்.

"விதியுங் கணவனு நேர்படினுந் தந்தம் விதியின் பயனே பயன்" என்று அஞ்ஞானிகள் சொல்லுமாப்போல் மனிதன் தன் தலைவிதியின் பயனாக பாவத்தைக் கட்டிக்கொள்ளலாயிற்றென்று போதிப்பது அபாயகரமானது. அப்படி போதித்தால், மனிதனானவன் தான் செய்யும் அக்கிரமத்திற்குத் தான் காரணஸ்தனல்லவேயல்லவென்று நினைத்து, மகிழ்ந்து, தன் அக்கிரம தோஷத்தினால் உலகத்தையே கிடுகிடென்று நடுங்கச்செய்துவிடுவானே! சந்தேகமற மனேக் போதித்த போதனை அதுவே. ஆனால் அதன் உண்மையை யவன் உலகத்திற்குச் சரியாய்க் காட்டவில்லை. இதனாலேயே, அவன் போதித்தது சத்தியமல்லவென்று தெரியவருகிறது. ஏனெனில், சத்தியமென்பது அவ்வளவு சம்பூரண சவுந்தரியமுள்ளதாகையால், அதற்கு மறைவு என்ப தவசியமில்லை. ஆனால் அசத்தியத்திற்கோவெனில், மனிதர்கள் அதன் நிஜார்த்தமான அந்தஸ்தையும், துர்ப்போதனைகளையும் ஸ்பஷ்டமாய்க் கண்டுகொள்ளாதபடி, கொஞ்சம் மறைவும் மேற் பூச்சும் அவசரமாயிருக்கிறது.

நான்காம் யுகத்தில் மனுப்புத்தியின் நிலைமையையும், ஜனசங்கத்தின் ஸ்திதியையும், யோசிக்குங்கால், மனேக்கின் போதனையானது இரும்பைக் காந்தம் இழுப்பதிற்கொப்பாக, ஆசாபாசங்களில் உழன்று திரிந்த மனிதர்களுடைய இருதயங்களைக் கவர்ந்ததெப்படியென்று ஆச்சரியப்படவேண்டியதில்லை.

மனுப்புத்தியானது, பெரிய பெரிய பிரசினங்களைப் பரிசோதித்துப் பார்த்து, அவைகளுக்குண்டான ஆதார ஞாயங்களைக் கண்டுணராது களைத்துப்போய், ஞான காரியங்களில் அசட்டைத்தனங்கொண்டும் அல்லது கள்ள போதனைகளில் சிக்கியும் கிடந்தது. அச்சமயத்தில்தான், கிறீஸ்து வேதம் அம்மனுப்புத்தியைக் கொஞ்சம் கிளர்ச்சிசெய்தது. அப்போது அது, கடவுள் யார்? ஆத்துமமென்பதென்ன? மனிதன் தவறி விழுந்ததெப்படி? நன்மைக்கும் தீமைக்கும் போராட்டமாகக் காரணம் யாது? உலகத்தின் முடிவு எப்போது? சத்தியங் கடைசியில் ஜெயங்கொள்ளுமோ, கொள்ளாதோ? என்பவைகளையும், இன்னும் மனிதர்கள் அத்தியந்த ஆவலுடன் உற்று யோசித்து உண்மையை அறிந்துகொள்ள ஆசிக்கும் இதைப்போலொத்த பெருத்த காரியங்களையும், மறுபடி சிந்திக்கத் தொடங்கிற்று. மூன்று யுகங்கள்மட்டும் மனிதன் இவ்வாறே சிந்திக்கச் சிந்திக்க, பற்பல விநோதமான கோட்பாடுகளெல்லாம் ஏற்படக் காரணமாயிற்று. அக்கோட்பாடுகளெவையெ

ணில், நன்மைக்கும் தீமைக்கும் போராட்டமுண்டென்று கிழக்கு தேசத்தார்கொண்ட கொள்கை, ஆத்துமத்தின் விஷயமாய் பித்தகோராஸ் என்பவன் போதித்த போதனை, ஆத்தும சுத்தத்தைப் பற்றி பிலாட்டோ போதித்த போதனைமுதலியவைகளாம். ஒரே வார்த்தையில், கிழக்கு தேசத்தாரும் மேற்கு இராச்சியத்தாரும், என்னென்னவோ குருட்டு யோசனையெல்லாம் செய்து, சேசுக்கிறீஸ்துநாதரைத் தங்களுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு, பற்பல விதமான துர்ப்போதனைகளைப் போதித்துவந்தார்கள். இப்போதனைகளும், முக்கியமாய் சுவிசேஷ போதனைக்குக் கொஞ்சம் இணங்கியிருந்த புதிய மனேக் போதனையும் சேசுநாதரையே தங்களுக்கு ஆதாரமாகச் சாதித்தன. ஆதலால் மனேக் என்பவன், மேசையாவின் வருகை, வார்த்தையானவரின் அவதாரம், சிலுவையில் மனிதர்களுக்குண்டான இரட்சண்யம் ஆகிய இப்போதனைகளையெல்லாம் தனக்கேற்றவிதமாய் அர்த்தம் பண்ணிக்கொண்டு, ஒரு நவீன மார்க்கத்தை ஏற்படுத்தினான்.

மனேக் ஏற்படுத்தின இம்மதத்தில், ஆத்தும இரட்சண்ய காரியங்களைப்பற்றிமாத்திரமல்ல, ஆனால் பொதுவாய் ஜனசங்கத்திற்கடுத்த விஷயங்களைப்பற்றியும் போதனை கண்டிருந்தது. உலகம் நிர்ப்பாக்கியத்தில் அமிழ்ந்தியிருந்தது. அவ்விதமான நிர்ப்பாக்கியம் முன் எப்போதும் அதற்கிருந்ததில்லையென்னத் தகும். ஆதலால் எந்த மதமானாலுஞ்சரி, அந்த நிர்ப்பாக்கியங்களைக் கரிசனையுடன் கவனித்து, அதற்கேற்ற பரிகார வழி தேடாதிருந்தால், அம்மதத்தை யாரும் மதித்திருக்கவேமாட்டார்கள். அக்காரணத்தைப்பற்றி, மனேக்கிய மதம் ஜனசங்கத்தைச் சீர்படுத்தி, அதன் சட்டங்கள் ஆசார வழக்கங்கள் முதலிய ஏற்பாடுகளினால், மனிதர்களுக்குண்டாகும் குறைகளைப் பரிகரிப்பதாய், பிரசித்தஞ்செய்தது. இப்படி உடனே ஜனசங்கத்தை முழுதும் சீர்படுத்துவது, இஸ்பிரீத்துசாந்துவினால் நிறைவேறத்தக்க கிருத்தியமேயொழிய, கேவலம் பொய்யான மனேக் மதத்தினால் ஆகுங் காரியமன்று.

இதன் போதனைகள் விநோதமான போதனைகள்தான். ஆனால் இக்காலத்தில் அவைகளைப் போதித்தால், காதுகொடுத்து கேட்கிறவர்கள் யாருமிரார். உலகத்தின் நிர்ப்பாக்கியத்தைக் குறைக்க, அஞ்ஞான சக்ரவர்த்திகள் பெரும்பாடுபட்டும் பயனற்றுப்போனதுபோலவே, கிறீஸ்துவச் சக்ரவர்த்திகளின் பிரயாசைகளும் நிஷ்பலனாய்ப்போயின. இதை ஜனங்கள் யோசித்து அவநம்பிக்கைகொண்டு, இதற்கெல்லாம் பரிகாரம் செய்ய தங்களால் ஏலாது, ஆனால் கடவுளாலேயே முடியுமென்றெண்ணியிருந்தார்கள். இச்சமயத்தில் புறப்பட்ட மனேக்கியமதமானது, உலகத்தின் நிர்ப்பாக்கியத்தைக் குறைத்து மனிதர்களுக்குப் பாக்கியத்தை யளிப்பதாய் போதித்துவந்தபடியால், யாவரும் களிப்படைந்து ஆவலோடு அதன் போதனைகளைக் கைக்கொள்ளலானார்கள்.

மனேக்கிய மதம் இப்படிப்பட்டதே. அது தத்துவசாஸ்திரம், தேவசாஸ்திரம் ஆராதனை முறை அடங்கப்பெற்ற ஒரு ஏற்பாடு. ஜனசங்கத்தைச் சம்பூரணமாய் சீர்ப்படுத்தி, அதனை முன்னுக்குக் கொண்டுவருவதே தன் கருத்தென்று சாதித்தது. அதன் போதனைகள் ஞாயத்திற்கு ஒவ்வாதிருந்ததென்பது சரியே. ஆனால் உலகத்தை யாள்வது ஞாயமோ. உலகத்திற்கும் ஞாயத்திற்கும் பொருத்தம் ஒருபோதுமில்லையென்று நமக்குத் தெரியும். சந்தேகமின்றி அரிசியும் கல்லும் கலந்திருப்பதுபோல. மூடத்தனமுள்ள விஷயங்களும் உந்நதமான போதனைகளும், ஆத்துமத்தைக் கடவுள் பாரிசமா யெழுப்பும் எண்ணங்களும் ஆசாபாசத்திற்குத் திருப்தி தரும் வெட்கங்கெட்ட படிப்பினைகளும், அதிலிருந்தன. மனிதர்களின் நிர்ப்பாக்கியத்தைப் போக்கி, அவர்களுக்குப் பாக்கியத்தையளிப்பதே அதன் கருத்து. ஆனால் அக்கருத்தை யடைய, அது தொடுத்த எத்தனங்கள் முற்றிலும் சரியானவையன்று. ஒரே வார்த்தையில், அது நாளைக்கென்ன சம்பவிக்குமென்னும் அக்கறைகொள்ளாத துணிச்சலுள்ள வாலிபர்களுக்கு ஏற்றமதம். உலக அநுபவமில்லாத அவ்வாலிபர்களுக்கு பார்வைக்கு நேர்த்தியாய்த் தோன்றும் ஒரு காரியத்தைக் காட்டிவிட்டால் போதும், அவர்கள் பிரமிப்படைந்து அக்காரியத்தில் புத்திக்கொவ்வாதவை என்னதான் இருந்தாலும் அவைகளைக் கவனியாமல் அனைத்தையும் நம்பிக்கொள்வார்கள்.

மனிதர்களுடைய மனதை மருட்சிசெய்ய இப்படிப்பட்ட வசியங்களன்றி, இன்னொரு பெரிய வசியமும் அம்மதத்தில் இருந்தது. அதாவது, தன் போதனைகளைக் கொஞ்சங்கொஞ்சமாய் இரகசியத்துடன் போதிப்பதே

யாம். ஏனெனில், மனேக்கிய மதம் ஒரு இரகசிய சங்கம். அதன் போதனைகள் நிதானமாயும் கொஞ்சம் கொஞ்சமாயும்தான் போதிக்கப்பட்டுவந்தன. அதில் புதிதாய் சேருகிறவர்கள் மனதில் ஏதாவது சந்தேகமுண்டானல், நாளாவட்டத்தில் அதன் போதனைகளைப் பூரணமாய்க் கற்றறிந்தபிறகு, அச்சந்தேகங்கள் யாவும் நிவர்த்தியாகும் என்று அதன் போதகர்கள் அவர்களுக்கு உரைக்க இது ஒரு சாக்காயிருந்தது. மேலும் அம்மதத்தில் இருந்த வெட்கங்கெட்ட போதனைகளை மறைத்துவைத்து, அவனவனுக்கு ஏற்றபடி அவற்றை கொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்படுத்திக்காட்டவும் இது ஒரு வழியாயிருந்தது.

மனேக்கியமதத்தில் இன்னொரு மாயவலையிருந்தது. அம்மாய வலையால், அது மனுப்புத்தியையே உபாயமாய்த் தன் பாரிசமாயிழுத்துக் கொள்ளத் தேடிற்று. ஒருவன் அதன் போதனையைக் கொஞ்சங் கொஞ்சமாய் அறிய அறிய, அவன் எவ்வித கட்டுக்கும் உட்படாமல், தன் சுயேச்சைப்படி எந்த போதனையையும் தனக்கேற்றபடி அர்த்தம்பண்ணி தீர்மானிக்கக்கூடுமென்பதே அதன் கொள்கை.

நமது சத்திய திருச்சபையில் அப்படிப்பட்ட கொள்கை கிடையாது. திருச்சபை சொற்படி கேளாதவன் அக்கியானியைப்போல் உனக்காகக்கடவானென்று ஞான உபதேசம் கற்பிக்கிறது. "இக்கட்டளை மெத்தவும் கண்டிப்பும் பயங்கரமுமுள்ள கட்டளையென்று யாவரும் அதனை யவமதித்துப் பரிகாசஞ்செய்துவந்ததாக" அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிருர். மனேக்கியரோவெனில் தாங்கள் எதை நம்பப் பிரியங்கொள்வார்களோ அதை நம்புவார்கள். எதை நம்ப பிரியங்கொள்ளமாட்டார்களோ அதை நம்பமாட்டார்கள். எவனும் வேத சத்தியங்களைத் தன் மனம்போனபடி அர்த்தஞ்செய்து கொள்ளலாகுமென்னும் இந் நியாயங்கெட்ட சுதந்தரத்தை லூத்தர் ஜனனத்திற்கு ஆயிரம் வருடத்திற்கு முன்னதாகவே மனேக்கியர் வேத சத்தியமாக தீர்மானித்திருந்தார்கள்.

மனேக்கியர் தங்களை மெத்தவும் புத்திசாலிகளென்று பெருமையுடன் எண்ணிக்கொண்டு, தங்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதை நம்பப் பிரியங்கொள்வார்களேயொழிய, யாராவது இதைத்தான் நம்பவேண்டும், அதை நம்பலாகாது என்று சொல்லவந்தால், ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஞானக்காரியங்களுக்கடுத்த சத்தியத்தை யறிய ஆவல்கொண்டு, யாருடைய உதவியையும் தேடாமல், தங்களுடைய சொந்த புத்தியாலேயே அதைக் கண்டுணர வருந்துவார்கள். ஆனல் அச்சத்தியத்தை சேசுக்கிறீஸ்துநாதருடைய உதவியால்மாத்திரம் அறியக்கூடுமென்று சற்றும் யோசிக்கமாட்டார்கள். அகுஸ்தீனுடைய புத்தியும் இப்படியேயிருந்தபடியாலும், இன்னும் அவர் பாவப்பழக்கத்தைக் கையாடிவந்ததினலும், அவருடைய இருதயம் மனேக்கிய போதனையை எவ்வளவு களிப்புடன் ஏற்றுக்கொண்டிருக்குமென்றும் நாம் கண்டுபிடிப்பது சுலபம். ஏனெனில், ஒருவன் பாவம் செய்தாலும், அதற்காக மனஸ்தாபப்படவேண்டிய முகாந்தரங்களேயில்லையென்று அம்மதம் போதிக்கின்றமையால், பச்சாத்தாபமே அவசரமில்லாமல்போகிறது. ஆதலால் அகுஸ்தீனுக்கு அப்போதனை எவ்வளவு பிரீதியாயிருந்திருக்குமென்று இதனல் நாம் கண்டுபிடிக்கலாகும்.

அவர் சத்திய திருச்சபையின் போதனையை ஒத்துக்கொண்டிருந்தால், தேவ இஷ்டப்பிரசாதங்களைப்பெற்று மெத்தவும் தேறுதலடைந்திருப்பார். ஆனல் அத்திருச்சபை அவருக்குப் பிடிக்கவில்லை. தன் தாயாருடைய ஆலோசனை கேட்காமலே, அல்லது அவளுக்குத் தெரிவிக்காமலே, தன் குழந்தைப் பருவத்தில் தன் தாய்ப்பாலோடு உட்கொண்ட கிறீஸ்து வேத சத்தியங்களைப் பிரசித்தமாய் நிராகரித்துத் தள்ளி, மனேக்கிய மதத்தின் முதலாம் அந்தஸ்தில் சேர ஆயத்தமாயிருக்கிறவர்களுடைய பட்டியில் தன் பெயரை எழுதிவைத்தார்.

அவருக்கு 20-வயது ஆகிறதற்கு முன்னதாகவே, திருச்சபையிலிருந்து பிரிந்துபோய் ஊதாரிப் பிள்ளையைப்போல் திரிந்துகொண்டிருந்தார். துர் ஆசாபாசங்கள் அவரது ஆத்துமத்தில் வேரூன்றிய வேகத்தைக் காணும்போது நமக்கே பயங்கரமுண்டாகிறது. அவரது 16-ம் வயதில் அவ்வாசாபாசங்கள் அவரது ஆத்துமத்தை உக்கிரத்துடன் எதிர்க்கத் துவக்க, அவர் அவைகளை யடக்காத குறையால் அவை சீக்கிரத்தில் திடங்கொண்டு, 19-ம் வயதிலே அவரைத் தங்கள் கொடிய சங்கிலியால் பிணைத்துக்கட்டி அடிமையாக்கிக்கொண்டன. ஆகவே, தன் சீவியத்தையே மாசுபடுத்திக் கெடுத்த துஷ்ட சகவாசத்தில் விழுந்து, விபசாரத்தில் ஒரு பிள்ளை

யும் பெற்றார். அவர்து இருதயம் மாசடையவே அவரது புத்தியும் குன்றந்தது. விசுவாசமும் மங்கிப்போயிற்று. அவர் சத்தியத்தை நாடியும் அதன் உறைவிடமாகிய திருச்சபையில் அதனைத் தேடி கண்டடையவில்லை. எனெனில் இருதய சுத்தமுள்ளவர்களுக்கே அது தெரிய வரும். ஆகையால் கெட்ட பிரிவினை சபையில் சேர்ந்து அதில் 9-வருஷகாலபரியந்தம் நிர்ப்பாக்கியமாய்க் காலங்கழித்துவந்தார்.

அவர் இன்னும் சிறு பிராயமாயிருக்கும் போதே, அபத்த போதனையும் வேசியர் நேசமும் அவரைத் தங்கள் மாயவலைக்குட்படுத்தி விட்டன. "ஓ நித்திய இராசாவே! உம்மை விட்டுவிட்டு அகுஸ்தீன் தெரிந்துகொண்டவைகளைப் பாரும். இவைகள் அவரது ஞானக் கண்களைக் கூசச்செய்து, மனதை அந்தகாரப்படுத்தி இருதயத்தைக் குருட்டாட்டத்தில் அமிழ்த்தின."

(இன்னும் வரும்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2-ம் அதிகாரம்; வசனம்—46-50.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—46. "பின்னும் சம்பவித்த தேதெனில் மூன்று நாளைக்குப் பிறகு தேவாலயத்தில் அவர் சாஸ்திரிகள் நடுவிலே உட்கார்ந்து அவர்கள் சொல்லுகிறதைக் கேட்கவும் அவர்களை வினவவும் கண்டார்கள்.

47-ம் வசனம்,—அவருடைய வாக்கைக்கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் மாறுத்தாரங்களையும்பற்றிப் பிரமித்துக்கொண்டிருந்தார்கள்."

மூன்று நாளைக்குப்பிறகு—சேசுநாதர் தம் பெற்றோருக்குத தெரியாமல் தங்கி விட்ட நாளிலிருந்து கணக்கிட்டால் மூன்று நாள் ஆகிறது. அதாவது முதல் நாள் தேவமாதாவும் சூசைமுனியும் மற்ற யூத ஜனங்களோடு ஜெருசலேமைவிட்டு திரும்பப் பிரயாணப்பட்ட நாளாகும். இரண்டாம் நாள் தங்கள் நேச குமாரனைக் காணாமல், பிரயாணிகள் இரவில் தங்கி இளைப்பாறின விடத்திலிருந்து ஜெருசலேமுக்குத் திரும்பின நாள். அந்நாளெல்லாம் சேசுவை எங்கும் தேடித் திரிந்தார்கள். மூன்றாம் நாள் காலையில் ஜெருசலேமில் வந்தவுடன், அங்கு தங்கள் திவ்ய குமாரன் இருக்கும்பட்சத்தில், அவர் தேவாலயத்தில்தான் இருக்கவேண்டுமென்று எண்ணி, அங்கேபோய் தேவாலயத்தின் மண்டபங்களின் ஒரு சாலையில் அவரைக் காணப் பாக்கியம்பெற்றார்கள். அவரைக் கண்டபோது அவர் சாஸ்திரிகள் நடுவே ஒரு சீஷனைப்போல் மேரை மரியாதையுடன் உட்கார்ந்து, அவர்கள் எடுத்துரைத்த பற்பல வேத விஷயங்களைச் சிரவணத்துடன் கேட்டு, பின்னர் அவர்களை நோக்கி தமது வயதுக்கு மேற்பட்ட அதிசயமான ஞானமும் நுண்ணறிவும் விளங்கும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். திருநாள் உற்சவங்களிலே வேத பண்டிதர் கூடிப் பெரியோரும் சிறியோருமாகத் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்க ஆசனங்களிலிருந்து வேத விசேஷங்களிலே தர்க்கம் பண்ணுவது அந்நாட்டின் வழக்கமாயிருந்தபடியால், சேசுநாதரும் சாஸ்திரிகள் கூட்டத்திலிருக்க நேரிட்டது. தன் ஆசிரியன் சொல்வதைக் கவனத்துடன் கேட்பதும், தனக்குத் தெரியாத விஷயங்களை அவனிடம் வினவுவதுமே ஒரு நல்ல சீஷனுக்கு அழகானால், சேசுநாதரும் மற்றவர்களுக்கு அறிவுபுகட்டும் ஒரு மகா ஞானியைப்போல் தம்மை காண்பித்துக்கொள்ளாமல், முதல் முதல் தாழ்ச்சியைப் படிப்பிக்கிறதற்காக ஓர் உத்தம சீஷனைப்போல் நடந்துகொண்டார்.

ஆனால் அவர் கேட்ட கேள்விகளால் தமது உன்னத ஞானத்தை விளக்கினதினால், அங்கு கூடியிருந்த சாஸ்திரிகளும் ஜனங்களும், ஓர் பெரிய புதுமையைக் கண்டதுபோல் ஆச்சரிய பிரமிப்படைந்து, அவர் சாமான்ய சிறுவன் அல்ல என்று எண்ணி, அவர் செப்பிய அருள் பொழியும் மொழிகளை நன்றாய்க் கேட்பதற்காக அவரைத் தங்கள் நடுவிலே ஓர் ஆசனத்தி

விருத்தி அவரைக் கண்ணியப்படுத்தினர்கள்.

அங்கு அன்று கூடினவர்கள் தங்களுக்குள்ளே மெஸ்ஸியாஸ் என்ற தேவ கிறீஸ்து பூலோகத்தில் பிறப்பாரென்று தீர்க்கதரிசிகள் எழுதின வாக்கியம் நிறைவேறினதோ இல்லையோ என்று தர்க்கமிட, சில பேர்கள் வந்தார் என்றும், சில பேர்கள் வரவில்லையென்றும், இரு பட்சமாய்ப் பேதலித்து அததற்கான நியாயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சேசுநாதரோவென்றால், அச்சாஸ்திரிகளுக்கு மெஸ்ஸியாஸ் வருகையைப் பற்றி அவர்கள் கவனித்து ஆராய்ந்து பார்க்க ஆசைகொள்ளுமாறு, தீர்க்கதரிசன வாக்கியங்களை விளக்கிக்காண்பித்தார். அவரைப் பிற்காலத்தில் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்காக, அவர்களைத் தாமே முன்னதாக முஸ்திப்புசெய்தார்.

இடையர் சேசுவின் பிறப்பைப்பற்றி விளம்பரம்பண்ணின விஷயங்களினாலும், சிமையோன், அன்ன இவர்கள் வெளிப்படுத்தின விஷயங்களினாலும், பக்தியுள்ள யூத ஜனங்கள் அந்நாட்களில் மெஸ்ஸியாவின் வருகையை எதிர்பார்த்தவண்ணமாய் இருந்தார்கள். சேசுநாதரும் தாம் இப்போது தேவாலயத்தில் நடந்துகொண்ட மாதிரிகையினால் அவர்களுடைய கண்களைத் திறக்க பெரிதும் உதவியாயிருந்தார்.

இவையெல்லாம் ஞானசூரியன் உதிக்கும் காலத்துக்குமுன் முஸ்திப்பாகத் தோன்றும் அருணோதயத்தின் குளிர்ந்த பிரபைபோல் துலங்கின.

நமதாண்டவர் உரைத்த ஞானம் நிறைந்த பிரத்தியுத்தாரங்களின் மகிமையையும், தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களைத் தெளிவித்த மகிமையையும், அக்கூட்டத்தில் காண்பித்த திவ்யமான சாந்த ஆசார மகிமையையும் கண்டு, சாஸ்திர பண்டிதர் உடல்கொள்ளாத ஆச்சரியங்கொண்டு, அவரை உபசரித்து, இப்படிப்பட்ட பாலனுக்குப் பிதா மாதா உண்டோ, எவருக்குப் பிறந்தவரோ, எவ்விடத்தில் சாஸ்திரம் படித்தவரோ என்று தங்களுக்குள்ளே சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில், கன்னிமாதாவும், சூசைமுனியும் குமாரனை அடுத்து, ஆச்சரிய அக்களிப்படைந்தார்கள்.

48-ம் வசனம்—"(அவருடைய மாதா பிதாவும்) அவரைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே ஏன் எங்களுக்கு இப்படிச்செய்தீர்? இதோ உம்முடைய தந்தையும் நானும் துக்கித்து, உம்மைத் தேடினோமே" என்றாள்.

தேவமாதாவும் சூசைமுனியும் ஆச்சரியப்பட்டதற்குக் காரணம் ஏதென்றால், தங்கள் திவ்ய குமாரன் இதுவரையில் இப்படிப்பட்ட தெய்வீக ஞானத்தைக் காண்பியாமல், இப்போதுதான் புதிதாய்ச் சாஸ்திரிகள் கூட்டத்தில் அதைக் காண்பித்ததானது அவர்களுக்கு வியப்பைத் தரும் விநோத காட்சியாயிருந்ததென்பதாம். மேலும் அவர் தம்மை ஜனங்களுக்குக் காண்பிக்கும் தருணத்தில் தமது பெற்றோரைத் துக்கசாகரத்தில் அமிழ்த்தினதும் அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. "மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தீர்?" என்று சூசைமுனி பேசாமல், தேவமாதா முந்திமுறையிட்டுப் பேசினதானது அவளுடைய தாய்க்குரிய நேசத்தின் பெருக்கத்தைக் காண்பிக்கின்றது.

இவ்வார்த்தையால், அவள் தன் உருக்கமுள்ள நேசத்தையும், தான் பட்ட கஸ்தியையும் வெளிப்படுத்துகிறாளே தவிர, தனது திவ்ய குமாரனைக் கடிந்துகொள்ளவில்லை. அன்றியும், அவர் தம் பெற்றோரை இவ்வாறு நடத்தினதற்கு முகாந்திரத்தைச் சொல்லும்படி தாய்க்குரிய உரிமை சுதந்தரத்துடன் கேட்கிறாள். சூசைமுனியை முந்தியும் தன்னைப் பிந்தியும் வைத்து அவள் பேசினதானது அவளுடைய தாழ்ச்சியை எண்பிக்கின்றது.

49-ம் வசனம்.—"அதற்கு அவர் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதோ?" என்றார்.

தேவமாதா கேட்ட கேள்விக்குச் சேசுநாதர் "ஏன் என்னைத் தேடினீர்கள்" என்று பதில் கூறினதினால் அவர் தம்

பெற்றோரைக் கண்டித்து பேசினார் என்று எண்ணவேண்டாம். இவ்வார்த்தைகளில் தாம் இவ்விதமாய் நடந்துகொண்டதற்கு நிமித்தமாயிருந்த நியாயத்தை அன்பாய் எடுத்துரைக்கின்றார். அவர்களைச் சஞ்சலப்படுத்த தாம் யாதொன்றும் செய்ததில்லையென்றும், தாம் தம்முடைய தேவ பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே அவர்களைவிட்டு பிரிந்திருக்க நேரிட்டதென்று அவர்கள் எண்ணியிருக்கவேண்டுமென்றும், அப்படி அவர்கள் எண்ணியிருப்பார்களேயானால் அவர்கள் கஸ்தியும் கவலையும் பட்டிருக்கமாட்டார்கள் என்றும் இவைமுதலான கருத்துகள் அடங்கியுள்ள மறுமொழியை அன்புடன் கூறினார்.

"என் பிதாவின் காரியங்களில்" என்று அவர் சொன்னபோது தமது கைத்தாதையாகிய சூசைமுனியல்லாமல், தமக்கு வேறே மெய்யான ஒரு பிதா இருக்கிறார் என்று வெளிப்படுத்தினார். இதுதான் முதல் விசை சேசுநாதர் தம்முடைய மெய்யான திவ்ய பிதாவைப்பற்றி திருவுளம்பற்றி தம்முடைய தெய்வீகத்தை வெளியாக்கினார் என்று அர்ச். சிரில் வசனிக்கிறார்.

50-ம் வசனம்.—"ஆனால் அவர்கள் தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையைக் கண்டுபிடிக்கவில்லை". அதாவது, அவர் தம் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்கவேண்டுமென்று சொன்னதினால், பிதாவின் காரியங்கள் எவையாயிருக்கலாமென்றும், பெற்றோரை விட்டு பிரிந்து அவர்களைக் கஸ்திக்குள்ளாக்கி சாஸ்திரிகளோடு தர்க்கித்ததானது எப்படி பிதாவின் காரியமாகுமென்றும் இவைகளுக்கு விபரங்கள் அச்சமயத்தில் அவர்களுக்கு அவ்வளவு தெளிவாய்ப் புலப்படவில்லை. மேலும் சேசுநாதர் மெய்யாகவே சர்வேசுரனுடைய குமாரன் என்றும், உலகரட்சகர் என்றும் தேவமாதா அறிந்திருந்தபோதிலும், அவர் தமது இரட்சண்ய வேலையை நடத்தப்போகிற காலம், விதம், அவர் படப்போகிற பாடுகளின் விபரங்கள் அவளுக்கு மறைவாயிருந்தன.

இந்த அறியாமையால் தேவமாதாவின் ஒப்பற்ற ஞானத்துக்கு யாதொரு குறைவும் வந்ததில்லையென்று சொல்லவேண்டும். ஏனெனில், அவள் அருட்பூரணியாயிருந்தாலும் இஷ்டப்பிரசாதத்திலும் தேவ சிநேகத்திலும் விர்த்தியடைந்ததுபோலவே, விசுவாசத்திலும் விர்த்தியடைந்தான். விசுவசிப்பதில் அவன் எள்ளளவும் தத்தளியாமலிருந்தாலும், விசுவசிக்கிற விஷயங்களில் நாளுக்கு நாள் அவளுடைய அறிவு வளர்ந்து விர்த்தியடைந்தது என்று வேதவித்தியாபாரகர் கூறுகிறார்கள்.

(தொடரும்.)

S. M.

INDIAN POLITICAL REFORMS.

இந்திய அரசியல் திருத்தம்.

ஜார்ஜ் சக்கரவர்த்தியின் பிரசித்த பத்திரம்.

இங்கிலாந்தின் இரு மந்திராலோசனை சபையாராலும் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் திருத்தமானது, ஒழுங்குப்படி, சக்கரவர்த்தியவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாய்விட்டது. அதற்கு அங்கீகாரம் கொடுத்தபின்னர், சக்கரவர்த்தியவர்கள் தமது இந்திய இராஜப் பிரதிநிதிக்கும், சுதேச மன்னர்களுக்கும், மற்றும் பிரஜைகளுக்கும் அனுப்பிய இராஜ விளம்பரம் பின்வருமாறு:—

இந்திய தேச சரித்திரத்தில் இன்று ஒரு விசேஷ ஞாபகார்த்த சம்பவம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவின் நல்ல ஆட்சி முறையையும் இந்தியக் குடிகளின் மனத்திருப்தியையும் உத்தேசித்துப் பார்லிமெண்டாரால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்திற்கு நான் என் இராஜ அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறேன். சரித்திர சம்பந்தமான பல சட்டங்களுள் இந்தச் சட்டம் ஒன்றாகும். கிழக்கு இந்தியா கம்பெனியார் ஆட்சி காலத்தில், நிர்வாக ஆட்சி முறையையும் நீதி பரிபாலனத்தையும் ஒழுங்குப்படுத்தி அமைப்பதற்கு 1773-ம் வருஷத்துச் சட்டமும் 1784-ம்

வருஷத்துச் சட்டமும் ஏற்பட்டன. 1833-ம் வருஷத்துச் சட்டம் இந்தியர்கள் கவர்ன்மெண்டின்கீழ் உத்தியோகங்களை வகிக்க இடங்கொடுத்தது. 1858-ம் வருஷத்திய சட்டத்தால் கம்பெனியாரின் நிர்வாக ஆட்சி கவர்ன்மெண்டின் கைக்கு மாற்றப்பட்டது. இந்தச் சட்டம் இப்பொழுதுண்டாகியிருக்கிற பொது ஜன வாழ்க்கைக்கு அஸ்திவாரத்தையும் கொடுத்தது. பிறகு 1861-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமானது ஜனப்பொறுப்பாட்சி முறைக்கு விதை விதைத்தது. இந்த விதை உயிருண்டாகி முளைப்பதற்கு 1909-ம் வருஷத்திய சீர்திருத்தச் சட்டம் அனுகூலமாயிருந்தது. இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிற சீர்திருத்த சட்டமானது கவர்ன்மெண்டின் ஆட்சி முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகளுக்கு ஒரு பங்கும் பொறுப்புமளித்து ஜனப் பொறுப்பாட்சியை அடைவதற்குரிய வழியையும் காண்பிக்கிறது. நான் மனப்பூர்வமாக எதிர்பார்க்கிறபடி, இந்தச் சட்டம் தன் லட்சியத்தை அடையுமானால், இதனின்று உண்டாகும் பயன்கள் மனிதவாழ்க்கை அபிவிருத்தி சரித்திரத்தில் விசேஷமாயிருக்கும். ஆகவே, இறந்த கால பயன்களைக் கவனித்து, எதிர்காலத்தில் நான் கொண்டுள்ள நம்பிக்கைகளை நம்பி அவைகளில் சேர்ந்து உழைக்கும்படி உங்களெல்லோரையும் இன்று அழைக்கிறேன். நான் உங்களெல்லோரையும் அழைப்பதற்கு இதுவே நல்ல சமயமாகும்.

இந்தியாவின் க்ஷேமத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டதுமுதல் இந்தியா எங்களாலும் இராஜ வம்சத்தினர்களாலும் தரும சொத்தென்று கொள்ளப்பட்டிருக்கிறது. 1858-ம் வருஷத்தில் எல்லோருடைய ஞாபகத்திலிருக்கிற விக்டோரியா மகாராணியார் தம் மற்றக் குடிகளுக்குச் செய்கிற கடமைகளை இந்திய குடிகளுக்கும் செய்வதாகப் பகிரங்கம் செய்தார். அவர் மத விஷயத்தில் தலையிடுவதில்லையென்று உறுதி கூறி, நீதி பரிபாலனம் பட்சபாதமின்றியும் எல்லோருக்குச் சமமாகவும் செய்யப்படுமென்று விளம்பரம் செய்தார். என் அருமைத் தகப்பனாராகிய ஏழாவது எட்வர்டு அரச சக்கரவர்த்தியவர்கள் 1903-ம் வருஷம் இந்திய ஜனங்களுக்கு அறிவித்த விளம்பரமொன்றில் நியாய ஆட்சி முறைக்குப் பங்கமுண்டாகாதவாறு தாம் பார்த்துக்கொள்வதாக வெளியிட்டார்கள். பின்னர் 1908-ம் வருஷம் வெளியான இராஜசாஸன விளம்பரத்தில் அவர், ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்டுள்ள உறுதி மொழிகளை குறிப்பிட்டு அவைகளினின்றும் பிறழாமல் தாம் ஆட்சி புரிவதாக அறிவித்தார். 1910-ம் வருஷம் நான் சிம்மாசனம் ஏறியபோது, சுதேச மன்னர்கள், இந்திய ஜனங்கள் முதலியவர்களுடைய இராஜபக்தியையும் அடிபணிதலையும் ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய சுபிட்சமும் சந்தோஷமும் எப்பொழுதும் என் முக்கிய கவனத்துக்குரியனவென்று உறுதி கூறி, அவர்களுக்கு ஓர் அறிக்கை யனுப்பினேன். பிறகு இந்தியாவுக்கு விஜயஞ்செய்து இந்திய ஜனங்களிடம் நான் கொண்டுள்ள அனுதாபத்தையும் அவர்களுடைய க்ஷேமத்தில் வைத்துள்ள என் அக்கறையையும் நிரூபித்துக்காட்டினேன்.

நானும் எனக்குமுன் அரசாண்டவர்களும் அன்பினாலும் சிரத்தையாலும் தூண்டப்பட்டு அக்குணங்களை நிரூபித்துவரும்போது, பார்லிமெண்டாரும் பிரிட்டிஷ் குடிமக்களும், இந்தியாவிலிருக்கும் என் உத்தியோகஸ்தர்களும் இந்தியாவின் முன்னேற்றத்தில் ஊக்கமுடையவர்களாயிருக்கிறார்கள். கடவுளால் எங்களுக்கு அனுக்கிரகிக்கப்பட்ட பல ஆசீர்வாதங்களை இந்திய ஜனங்களுக்கும் வழங்க நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். ஆனால் கொடுக்கப்படவேண்டிய ஒரு நன்கொடைமாத்திரமிருக்கிறது. இஃதன்றி ஜனங்களின் முன்னேற்றம் நிறைவேறாது. அதாவது தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்து அவைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமையாகும். அந்நியர்களின் படையெழுச்சி இந்தியாவில் ஏற்படாதவாறு பாதுகாக்கவேண்டும். இக்கடமையை ஏகாதிபத்திய கவர்ன்மெண்டார் கௌரவத்துடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். உள் நாட்டு விவகாரங்களின் பொறுப்பையும் நிர்வாகத்தையும் இந்தியா ஏற்றுக்கொள்ள ஆசைகொள்ளலாம். இஃதொரு பெரிய பாரமாகும். நீண்ட கால அனுபவம் பெற்றபிறகுதான் இந்தப் பாரத்தைச் சுமக்கச் சக்தி ஏற்படும். ஆனால் அனுபவமுண்டாவதற்கும் பொறுப்பு அதிகரிப்பதற்கும் இப்போது சௌகரியம் செய்யப்பட்டிருக்கிறது.

என் குடிகளாகிய இந்திய ஜனங்கள் ஜனப்பொறுப்புள்ள ஆட்சி முறை ஸ்தாபனங்களை விரும்புகிறார்களென்பதை நான் அனுதாபத்துடன் நுட்பமாகக் கவனித்துவந்திருக்கிறேன்.

சிறிதளவில் ஆரம்பமாகி இந்த விருப்பம் படித்த இந்தியர்களிடம் அதிகரித்து வந்திருக்கிறது. இந்த விருப்பம் நியாய வழிபற்றி வளர்ந்திருக்கிறது. சில சமயங்களில் தேசாபிமானப் போர்வை போர்த்துக்கொண்டு சிலர் சட்டத்தைமீறி முரட்டுச் செயல்களைப் புரிந்து அந்த விருப்பத்தை யும் நிந்தித்திருக்கின்றனர். இந்தப் பெரிய யுத்தத்தில் பிரிட்டிஷார் கொண்ட நோக்கங்களால் இந்தியர்களின் விருப்பம் மிகவும் அதிகரித்திருக்கிறது. இந்தியர்கள் பிரிட்டிஷார்களுடன் சேர்ந்து போர்புரிந்தார்கள்; கவலைப்பட்டார்கள்; கடைசியில் வெற்றியுமடைந்தார்கள். இவ் விஷயங்களில் இந்தியா எடுத்துக்கொண்ட பங்கினால், இந்தியர்களின் ஜனவிருப்பம் ஆதரவு பெற்றிருக்கிறது. அரசியல் பொறுப்பு வேண்டுமென்கிற கோரிக்கைப் பிரிட்டிஷாரின் சம்பந்தத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்டதாகுமென்று சொல்வது உண்மை. பிரிட்டிஷாரின் சம்பந்தத்தால் இந்தியர்களின் கோரிக்கை, மனித வாழ்க்கை சரித்திரங்களையும் கருத்துக்களையும் அதிகமாகவும் ஆழ்ந்தும் படிப்பதனால் அவர்களுக்கு ஏற்பட்டதாகும். இஃதன்றி இந்தியாவில் பிரிட்டிஷாரின் வேலை அரைகுறையாக விருந்திருக்கும். ஆகையினால்தான் பல வருஷங்களுக்குமுன்பு இந்தியாவில் ஜனப்பொறுப்பாட்சி ஸ்தாபனங்களுக்கு ஆரம்பக் காரியங்கள் செய்யப்பட்டன. நாளடைவில் ஜனப்பொறுப்பாட்சி ஸ்தாபனங்கள் அதிகரிக்கப்பட்டு இப்போது அந்த ஆட்சி முறைக்கு வழியும் சித்தம் செய்யப்பட்டு அது நம்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அதிக அனுதாபத்துடனும், அக்கறையுடனும் நான் இனி உங்களுடைய அபிவிருத்தியைக் கவனித்துவருவேன். நீங்கள் செல்லும் பாதை எளிதாக நடந்துசெல்லக்கூடியதல்ல. இதன் லட்சியத்தை அடைவதற்கு நடந்துசெல்லுங்கால் பல வகுப்புகளும் ஜாதிகளுமடங்கிய என் ஜனங்கள் பொறுமையையும் உழைப்பையும் கைக்கொள்ளவேண்டும். இந்த உயர்ந்த குணங்களை அவர்கள் பெறுவார்களென்று நான் நம்பியிருக்கிறேன். யாருக்காகச் சட்ட சபைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவர்களுடைய விருப்பங்களையும் இன்னும் ஓட் சுதந்தரம் வழங்கப்படாதிருக்கிற பாமர ஜனங்களின் க்ஷேமங்களையும் அச்சட்ட சபைகள் தகுந்தபடி விவகரிக்குமென்று நான் நம்புகிறேன். ஜனத்தலைவர்களும், வரப்போகிற மந்திரிகளும் ஜனப்பொறுப்பை வகித்து, உண்மையான தேசாபிமானம், கட்சி பேதங்களைக் கடந்துநிற்கிறதென்று அறிவார்களென நான் எதிர்பார்க்கிறேன். அவர்கள் சட்ட சபையின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வதோடு அநாவசியமான விஷயங்களில் அபிப்பிராய பேதங்களைத் தள்ளிவிட்டுப் பொதுஜன நன்மைக்கு என் உத்தியோகஸ்தர்களோடு கலந்து வேலை செய்வார்களென்றும் எதிர்பார்க்கிறேன். என் உத்தியோகஸ்தர்களும், ஜனத் தலைவர்களையும், புது மந்திரிகளையும் மதித்து அவர்களுடன் முரண்பாடில்லாமல் நேசப்பான்மையுடன் ஒத்துழைப்பார்களென்றும் நான் நம்பியிருக்கிறேன். மேலும், ஜனங்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் ஒழுங்காக ஜனப்பொறுப்பாட்சிமுறையின் லட்சியத்தை யடைவதற்கு என் உத்தியோகஸ்தர்கள் உதவி செய்வார்களென்றும், என் ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமையைக் குறைவறச் செய்வார்களென்றும் நம்பியிருக்கிறேன்.

என் ஜனங்களுக்கும் என் கவர்ன்மெண்டை நடத்துபவர்களுக்கும் ஏற்பட்டுள்ள மனக்கசப்பு கூடியவரையில் ஒழிக்கப்படவேண்டுமென்பது இப்பொழுது எனது நோக்கமாயிருக்கிறது. அரசியல் முன்னேற்றம் பெறவேண்டுமென்ற ஆசைகொண்டு சட்டத்தை மீறி நடந்தவர்கள் இனியேனும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கட்டும். கவர்ன்மெண்டை நடத்தும் அதிகாரிகள் சில சமயங்களில் தடுக்கவேண்டிருந்த அதிக்கிரமங்களை மறந்துபோகவும் இடமேற்படட்டும். ஒரு புதிய காலம் தோன்றியிருக்கிறது. என் ஜனங்களும், என் உத்தியோகஸ்தர்களும் கலந்து ஒரு முகமாக வேலை செய்ய ஆரம்பம் ஏற்படட்டும். ஆதலால் பொதுஜன க்ஷேமத்திற்குப் பாதகமுண்டாகாமல் என் பெயரால் எனக்காக அரசியல் குற்றவாளிகளை விடுதலைசெய்யும்படி நான் என் வைசிராய்க்கு உத்தரவு செய்திருக்கிறேன். அரசாங்கநிமித்தம் ஏற்பட்டுள்ள அவசர சட்டங்களினால் சிறையில் வருந்துவோர்களையும் மேலும் சுதந்தரத்தை இழந்திருப்பவர்களையும் விடுதலைசெய்யவேண்டுமென்று அறிவித்திருக்கிறேன். இதை யறிந்து விடுதலைசெய்யப்படுவோர்களும் என்னுடைய எல்லாப் பிரஜைகளும் இனி அநாவசியமாகச் சட்டங்கள் உபயோகிக்கப்படாவண்ணம் பார்த்து நடப்பார்களென்று நம்புகிறேன்.

பிரிட்டிஷ் இந்தியாவில் புதிய அரசியல் அமைப்பு ஏற்படுவதை யொட்டிச் சுதேச மன்னர் சபை ஒன்று ஏற்படுமோறும் நான் சம்மதித்திருக்கிறேன். அதனால் அம்மன்னர்களுக்கும் அவர்கள் ராஜ்யங்களுக்கும் நிலைத்த நன்மை யுண்டாமென்றும், அவர்கள் சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், பொதுவாக ஏகாதிபத்தியத்திற்கும் நன்மை யேற்படுமென்றும் நான் நம்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில், இந்திய மன்னர்கள் பாத்தியங்களும் உரிமைகளும் கௌரவங்களும் பழுதின்றி நிலைத்திருக்குமாறு செய்ய நான் தீர்மானித்திருப்பதையும் நான் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

சிற்றரசர்களடங்கிய சபையையும் பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்படப்போகும் புதிய சபையையும் திறந்துவைக்கும்பொருட்டு அடுத்த மாரி காலத்தில் என்னுடைய அருமைக் குமாரனாகிய இளவரசரை இந்தியாவுக்கு அனுப்பவேண்டுமென்பது என்னுடைய நோக்கம். இந்தியாவின் எதிர்கால முன்னேற்றம் யாரைப் பொறுத்திருக்கிறதோ அவர்களுக்கும் இளவரசருக்கும் ஒற்றுமையும் சிநேகபாவமும் உண்டாக வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தியர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றிபெறுமாறு இந்தச் சிநேகபாவம் நிலைத்திருப்பதாக. என்னுடைய குடிகளுடன் சேர்ந்து, நான், கடவுளின் அருள் வழியால் இந்தியர் நன்னிலையையும் திருப்தியையுமடையவேண்டுமென்று அக்கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர்கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதி விடுகிறார்கள். இடம் போதாமையால் அவைகளை ஒருவாறு குறைக்கவும், அல்லது முழுதுமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்துத் தங்கள் கடிதங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறோம். ப—ர்.]

பரத சர்வஜன சங்கம்.

பரத ஜாதிக்கு ஓர் பரத சர்வஜன சங்கம் ஏற்படுத்தவேண்டிய விஷயமாய் பல கிராமங்களிலும் பட்டணங்களிலும் உள்ள பிரதி காரியஸ்தர்களடங்கிய ஆரம்பப் பகிரங்கக் கூட்டமொன்று 1920ளு ஜனவரிமீ 11வ-யன்று தூத்துக்குடியில் நடைபெறும்.

ஷை கூட்டத்திற்கு இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பரதர்கள் பல பிரதிநிதிகளை அனுப்பவேண்டுவதுடன் ஷை விபரத்திற்கு கூட்டம் கூடுவதற்கு மூன்று தினத்திற்குமுன்னே பிரதிநிதிகளைப்பற்றி காரியதரிசி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவும்வேண்டியது. ஷை கூட்டத்தில் தீர்மானத்திற்குக் கொண்டுவரவேண்டிய முக்கிய விஷயங்களிருந்தால் அவைகளைக் கூட்டத்திற்கு ஒரு வாரத்துக்குமுன் அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பப்படும் விஷயங்களில் விஷய ஆலோசனைக் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளே ஷை கூட்டத்தின் தீர்மானத்துக்கு கொண்டுவரப்படும்.

ஷை கூட்ட சம்பந்தமான சகல நடபடிக்கைகளுக்கும் காரியதரிசி அவர்களுக்கே எழுதிக் கொள்ளவேண்டியது.

J. L. P. ரோச்-விக்டோரியா,
பரத சங்கங்களுடைய பிரதிநிதிகளின் பிரதமக் கூட்டத்தின் கமிட்டிக் காரியதரிசி.

"Bethania Lodge"
Tuticorin, 16-12-19.

கீழப்பட்டிராசியமங்கலம்.

நல்லாயன் பத்திராதிபருக்கு,

ஐயா, புதுக்கோட்டை சமஸ்தானம் கோட்டைக்காட்டுப் பங்கைச்சேர்ந்த மேலாத்தூர் என்ற கீழப்பட்டிராசியமங்கலம் கிராமத்திலுள்ள கிறீஸ்துவர்கள் எல்லோரும் சென்ற 14—12—19வ- காலை மாதாக்கோவிலுக்குச் சென்று நமது சக்கரவர்த்தி அவர்களுக்கு சண்டையில் ஜெயமேற்பட்டு சமாதானம் உண்டானதை முன்னிட்டு, சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்ததுமன்றி, சக்கரவர்த்தி அவர்களும், புதுக்கோட்டை மகாராஜா அவர்களும் நீடூழிகாலம் வாழவேண்டுமென்று பிரார்த்தனையுஞ்செய்தார்கள். பிறகு எல்லோருக்கும் சர்க்கரை வழங்கப்பட்டு அவரவர்களும் சந்தோஷமாய் தங்கள் தங்கள் இல்லம் சென்றனர்.

மூ. சு. அருளாந்து உடையான்.

கடாக்.

ஸ்ரீமான் "நல்ல ஆயன்" பத்திராதிபரே,

நவம்பர்ீ சஞ்சிகையில் "ஓர் அறிவிப்பு" என்ற துண்டு பத்திரமொன்று அடக்கியிருக்கக் கண்டேன். பிரதி மாதமும் தவறாமல் வெளி வந்து உலாவி தன்னுடைய மந்தையிலுள்ள ஆடுகளுக்கு இளந்துளிர், இலை, காய், பூ முதலியவைகளுக்கொப்பான புத்திமதிகளையும் நல்லுணர்ச்சிகளையுமூட்டி போஷித்துவரும் "நல்ல ஆயன்" அச்சு சமான்களின் விலை அபாரமாய் ஏறியிருக்கும் இக்கொடிய பஞ்சகாலத்திலுமுதலாய்ச் சந்தாவை ஓர் சிறிதும் உயர்த்தாமல், தன் அலுவலை ஒன்றுக்கும் பின்வாங்காமல், நடத்திவருங்கால், அதன் சந்தாதாரர்கள் தங்களுடைய சந்தா ரூ. 1—4—0 யும் நிலுவையாய் வைத்துக் கொள்ளாமற் செலுத்தி அதன் க்ஷேமலாபத்தைக் கருதவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். கத்தோலிக்குப் பத்திரிகைகளின் தொகை வெகு சொற்பமே. ஆனதின் நிமித்தம் நம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களனைவரும் வேதாபிமானம்கொண்டவர்களாய் அவைகளை யாதரிக்க முன்வரவேண்டியது. தங்கள் பேருக்கு "நல்ல ஆயன்" நன்கொடையாக ரூ. 1 மணியார்டர் செய்கிறேன். தயவுசெய்து அதை ஏழை அடியேனுடைய பங்காகப் பெற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்,

22—11—19. P. JABAMONEY,
Foreman, M. & S. M Ry.
Gadag.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

மூன்று புது சப் கோர்ட்டுகள்.—தஞ்சாவூரில் இரண்டும், மன்னார்குடியில் ஒன்றுமாக மூன்று சப் கோர்ட்டுகள் இப்புது வருஷ முதற்கொண்டு ஆரம்பித்து நடத்துவதற்குக் கவர்ண்மெண்டார் உத்தரவளித்திருக்கிறார்கள்.

மராமத்து இலாக்கா.—ரஸ்தாக்கள், வாராவதிகள், மதகுகள், அணைக்கட்டுகள் முதலியவைகளை மராமத்து செய்வதற்காக இவ்வருஷத்தில் ஆறு லட்சம் ரூபாய் கவர்ண்மெண்டார் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

மசூரிகைப் பால்குத்தலும், வயிற்றுக் கடுப்பும்.—வயிற்றுக்கடுப்பென்னும் சீதபேதியை இஞக்குலேஷன் என்னும் மசூரிகைப் பால்குத்தலால் குணப்படுத்தும் ஒரு புதிய முறையைக் கபேச்சிஞ என்னும் ஒரு ஜப்பானியப் பண்டிதர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

சீனாவில் கத்தோலிக்குச் சர்வகலாசாலை.—கத்தோலிக்கர்களின் முயற்சியால் சமீபத்தில் சீனாவில், "அரோரா யூனிவெர்சிட்டி" என்னுமொரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. சீனா முழுமைக்கும் கத்தோலிக்கு சர்வகலாசாலை இது ஒன்றேயாகும். இதில் சட்ட நூல், சிற்ப நூல், வைத்திய நூல் முதலிய நூல் ஆராய்ச்சிகளுக்கும், விசேஷமாய் கைத்தொழில் சாஸ்திர ஆராய்ச்சிக்கும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓர் அந்தகக் குரு.—பத்தாம் பத்திநாத பாப்பானவரின் விசேஷ உத்தரவினால் குருப்பட்டம் கொடுக்கப்பட்ட சங். ஹென்ரி வெஸ்லிங் என்னுங் குருவானவர் அந்தகர். இவர் சேசு சபையைச் சேர்ந்தவர். பரிசுத்த கன்னிமரியாயி, உத்தரிக்கிற ஆத்துமாக்கள் பூசைச் செபங்களைப் பிறர் வாசிக்கக்கேட்டு மனப்பாடம் பண்ணிக்கொண்டு இவ்விரண்டு பூசைகளில் ஏதாவதொன்றை நாடோறும் செய்துவருகிறாராம். இவர் இப்போது கனடா தேசத்திலிருந்து வருகிறார்.

இந்தியாவில் ஆகாயத்தபால்.—இந்தியாவில் முதல் ஆகாயத்தபால் பம்பாயிலிருந்து கராய்ச்சிக்கு இந்த ஜனவரி மத்திபத்திலிருந்து அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடாகிவிட்டது. ஆகாயமார்க்கமாய் அனுப்பப்படுந் தபாலுக்கு சாதாரணத் தபால் கட்டணத்துடன் எட்டணா அதிக கட்டணம் கட்டவேண்டியது. தபால் வஸ்துவின்மேல் "ஆகாயத்தபால் மார்க்கமாய்" என்று குறிப்பிடவேண்டும். இந்த ஆகாயத்தபால் வாரத்துக்கு ஒரு முறை புறப்படும்.

இரு மேற்றிராணிமார்களின் மரணம்.—கொச்சி இராச்சியத்தின் தலைநகரமாகிய எர்ணகுளத்து மேற்றிராணியாராகிய சரி. வந். டாக்டர் பரப்பரம்பில் ஆண்டவரவர்கள் சென்றமீ 9உ தமது 73-ம் வய

தில் தேகவியோகமாயினரென்றும், திருச்சூர் மேற்றிராணியாராகிய சரி. வந். டாக்டர் ஜான் மெனுச்சரி ஆண்டவரவர்கள் தம்முடைய 63-வது வயதில் சென்றமீ 19உ காலஞ்சென்றாரென்றும்கேள்வியுற்று மிக்க விசனிக்கிறோம். இந்திய குருக்களில் மேற்றிராணியார் பட்டத்துக்கு முதல்முதல் தெரிந்தெடுக்கப்பட்ட மூவரில் இவர்கள் இருவர் ஆவர். இவர்களிருவரும் சென்ற 23-வருஷமளவாக மேற்றிராணியார் அலுவலைப் பார்த்துவந்தார்கள். இவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வோமாக.

லார்டு எஸ். பி. சின்னு.—இந்த இந்தியபிரபு ரஜாவின்பேரில் இந்தியாவுக்குத் திரும்பிவருகிறார். இவர் வங்காளத்துக்குக் கவர்னராய் நியமிக்கப்படுவார் என்ற பலத்த வதந்தி உலாவுகிறது. இந்தியரில் லார்ட்டு பட்டம்பெற்றவர் இவர் ஒருவரேயாகும். இப்போது பிறந்திருக்கிற வதந்தியின்பிரகாரம் வங்காளத்துக்குக் கவர்னராய் நியமிக்கப்படுவாரானால், இவரே இந்தியருக்குள் முதல் கவர்னராவார். இனி நல்ல கல்வியும் புத்தியும் படைத்த இந்தியர்களுக்கு மகத்தான பதவிகள் சகஜமாய் கிடைத்துவிடுமென்பதில் சந்தேகமில்லை.

தேவமாதாவுக்கு இன்னோர் பட்டப்பெயர்.—நிரீச்சுரவாதமும் அஞ்ஞானமும் மலிந்துகிடக்கின்ற பிரான்சுநாட்டில்தெய்வபக்தியும் பற்றுதலும் ஒரு பக்கத்தில் காணப்படுவது கிறீஸ்துவர்களுக்கு ஒருவித மன ஆறுதலைக் கொடுக்குமென்பதில சந்தேகமில்லை. பிரென்ச்சு ஆகாய விமானிகள் ஆகாய கமனஞ்செய்கையில் தங்களுக்கு நேரிடக்கூடிய ஆபத்துக்களில் தஙகளை இரட்சிக்கும்படி தேவதாயாரைக் கேட்ட மன்றாட்டுக்கள் பெரும்பான்மையும் கேட்கப்பட்டபடியால், தேவமாதாவை "ஆகாய கமனிகளுக்குத் தஞ்சமான ஆண்டவளே" எனப புதுப் பெயரால் பக்தியுடன் அழைத்துவருகிறார்களாம்.

ஆஸ்திரியாவில் உணவுப்பொருட் பஞ்சம்.—ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டு வலிய யுத்தந் தொடுத்துத் தோல்வியடைந்த ஆஸ்திரியா தேசத்தில் ஜனங்களுக்கு உண்ணும் உணவு சுன்னமாய் விட்டதாம். தற்போது 6 நாட்களுக்கே சாப்பாட்டுக்கு இருக்கிறதென்றும், இந்த ஜனவரி மாதத்துக்குச் சாப்பிட ஒன்றுமில்லையென்றுஞ் சொல்லி உணவுப் பொருள் கேட்க, ஆஸ்திரியா இராஜாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் இங்கிலாந்துக்குப்போயிருக்கிறார். இங்கிலாந்தின் உதவியின்றி எந்த நாட்டுக்கும் உணவுப்பொருள் கிடைப்பது அரிது. ஆஸ்திரியர் கஷ்டத்தை நோக்குங்கால் நமது கஷ்டம் கஷ்டமல்லவென்றே சொல்லலாம். நம் நாட்டில் ஒற்றைக்கு இரட்டை விலை கொடுத்தாலும் உணவுப்பொருள் கிடைக்கிறது. ஆஸ்திரியாவில் ஒன்றுக்கு ஆயிரம்கொடுத்தாலும் அது கிடைப்பதில்லை.

பாப்பானவரின் ஸ்தானாதிபதி.—இந்தியாவுக்குப்புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கிற பாப்பானவரின ஸ்தானாதிபதியாகிய மேன்மைதங்கிய பிசானி ஆண்டவரவர்கள் காலஞ்சென்ற பரிசுத்த பாப்பானவராகிய பத்தாம் பத்திநாதர் காலத்தில் அவரது அந்தரங்கக்காரியதரிசியாயிருந்தனரென்றும், மெத்த காரிய நிர்வாகியென்றும் சொல்லப்படுகிறது. இவர் சென்றமீ 21உ இந்தியாவின் அப்போஸ்தலராகிய அர்ச். தோமையார் திருநாளன்று கர்தினால் வான்ரோஸ்ஸம் அவர்களால் மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பட்டாரென்ற தந்திசமாசாரம் எட்டியிருக்கிறது.

பதிதக் கோமகன் மனந்திரும்புகிறார்.—சுவிட்சர்லான்டுதேசத்து இராஜ குடும்பத்தைச் சேர்ந்த பிரின்ஸ் ஆல்பன் என்னுங் கோமகன் சென்ற ஐரோப்பா யுத்த சம்பந்தமாய் இராணுவத்தில் சேர்ந்து ஊழியஞ் செய்கையில், கத்தோலிக்கருடனும், கத்தோலிக்குக் குருக்களுடனும் கூடிச் சகவாசஞ்செய்ததின்பயனாக, தம் மதத்தைவிட்டு சத்திய வேதத்தைத் தழுவிக்கொண்டு தமக்குள்ள ஏராளமான சம்பத்துக்களை நிராகரித்துவிட்டு, பிரான்சிஸ்கன் என்னும் ஐந்துகாயச் சவேரியார் சபையில் சந்நியாசத்தைக்கைக்கொண்டாராம். என்னே இவருடையசத்திய வைராக்யம்! சிந்து தேசதது அப்போஸ்தலராகிய அர்ச். சவேரியார்போன்ற பல பேர்

போன அர்ச்சியசிஷ்டவர்கள் இவ்வாறு பெரிய தனவந்தர்களாயிருந்தவர்களே!

அங்கப்பழுதுற்ற யுத்தவீரர்கள்.—யுத்தத்தில் கை, கால், கண் முதலிய உறுப்புக்களை யிழந்து வேலை செய்து பிழைக்க வகையில்லாதவர்களுக்கு விசேஷ விதமாய் கைத்தொழில் கற்பிப்பதற்காக பம்பாயில், பைக்குல்லா என்னுமிடத்தில் லேடி வில்லிங்டன் முயற்சியால் ஒரு கைத்தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டு, வெகு பிரயோஜனகரமாய் நடைபெற்றுவருகின்றது. இந்தத் தொழிற்சாலையில் அன்னோர் பற்பல யந்திரங்களைக்கொண்டு தகரத்தகடு செய்வது, மரம் அறுப்பது, அராவுவது, மேஜோடு, பனியன் முதலியவை பின்னுவது, துணிகளைத் தைப்பது முதலியவைகளை நிதரிசனமாய்க் காட்டும் படங்களடங்கிய அறிக்கைப் பத்திரமொன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதில் பயிற்சிபெற்றவர்கள் தங்களுக்குக் கவர்ண்மென்டாரால் கொடுக்கப்பட்ட உபகாரச்சம்பளமன்றி மாதம் ரூ. 30 முதல், ரூ. 100 வரையில் சம்பாதித்து க்ஷேமமாய் ஜீவிக்கும் ஆற்றலுடையவர்களாகிறார்களெனத் தெரியவருகிறது.

சங். L. X. பேர்நான்டஸ் சுவாமிகள். இரங்கூன், பர்மா, மான்டலே, மாலாக்கா, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய ஊர்களுக்குச் சென்றிருந்த இந்த நல்ல சுவாமிகள், டிசம்பர்மீ 22-ம் தேதி மாலையில் சென்னைக்கு சிந்தாத்திரையாய்த் திரும்பி வந்துவிட்டார்கள். இவர்களின் குருப்பட்டாபிஷேக வெள்ளி ஜூபிலி நாளாகிய சென்றநவம்பர்மீ 25-ம் தேதியன்று சுவாமிகள் வெளியூரிலிருக்க நேரிட்டபடியால், அம்மகோற்சவம் சென்னையிற் கொண்டாடப்படவில்லை. ஆயினும், அவர்களது விசாரணைக் கோவிலை ஒப்புக்கொண்ட தினமாகிய அடுத்த பெப்ரவரிமீ 17-ம் உயன்று அந்த ஜூபிலியைக் கொண்டாட உத்தேசிப்பதாகத் தெரியவருகிறது. கொழும்பிலுள்ள பரதகுலச் சங்கத்தார், ஷெ ஜூபிலியைக் கொழும்பில், சென்ற டிசம்பர்மீ 28-ம் தேதி கொண்டாடப்போவதாகப் பிரசுரித்த துண்டுப் பத்திரம் வரப்பெற்றோம். அதன்பிரகாரம் கொண்டாட்டம் சிறப்பாய் நடந்திருக்குமென நம்புகிறோம். திருநெல்வேலி ஜில்லா வீரபாண்டியன் பட்டண பரதகுலத்தவர்களாலும் இந்த ஜூபிலி மிக்கச் சம்பிரமமாய்ச் சென்ற நவம்பர்மீ 25ஷ கொண்டாடப்பட்டது. அவ்விடத்தில் நடந்த இவ்வைபவத்தின் விபரங்களடங்கிய காரியக்கிரமப்பிரகடன (Programme) மொன்று நமக்கனுப்பப்பட்டது.

கர்தினல் மேர்சியர். — பெல்ஜியதேசத்து வீரசூரரான மேன்மைதங்கிய மெர்சியர் என்னும் கர்தினல் அவர்கள் சமீபத்தில் அமெரிக்கா தேசத்துக்குப்போய்த் திரும்புகையில், இங்கிலாந்துக்கு வெஸ்ட்மின்ஸ்டரின் அதிமேற்றிராணியாரான மேன்மைதங்கிய கர்தினல் போர்ன் அவர்களின் அதிதியாகப்போயிருந்தார். அங்கு ஜனங்கள் அவருக்கு நல்வரவு தந்து, அவர் யுத்த சம்பந்தமாய்ச்செய்த அரிய வேலைக்காக அவரைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடினார்கள். யுத்த காலத்தில் அவர் நமது சத்திய வேதத்துக்குமாத்திரமல்ல, தேசிய சுதந்தரத்துக்கும் பலத்தவோர் அரணாக இருந்தார். அவர் தமக்கு நேரிட்ட நெறுக்கிடைக்காலத்திலும் தமது தைரியத்தையும், வேத விசுவாசத்தையும் கைவிட்டவரல்ல. இதை எண்பிக்க ஒரு சிறு விருத்தாந்தமுண்டு. அதாவது, அக்காலத்தில் தாம் தம் விசாரணையைச் சேர்ந்த விசுவாசிகளுக்கு அனுப்பிக்கொண்டிருந்த சுற்றுக் கடிதங்களில் ஏதோ இராஜாங்கத்துக்கு விரோதமான விஷயங்கள் அடங்கியிருப்பதாக அனுமானித்த ஜெர்மன் சக்ரவர்த்தி கெய்சர் அவைகளை அந்நாட்டின் தேசாதிபதிக்குக்காட்டி, அவன் அவற்றை அங்கீகரித்தபின்னரே அனுப்பவேண்டுமென்று, அவருக்கு ஒரு தூதன் மூலமாய்ச் சொல்லியனுப்பியதற்கு, அவர் சொல்லிய மறுமொழி பின்வருமாறு:—"என் பிரஜைகளுக்கு நான் விரும்பியவைகளை எழுதியனுப்பும் சுதந்தரம் என்னுடையது. இவ்விஷயத்தில் பரமண்டலங்களிலுள்ள என் தெய்வீக எஜமானன் அல்லது அவருக்குப்பதில் இவ்வுலகத்திலுள்ள பிரதிநிதியாகிய அர்ச். பாப்பானவர் இவர்கள் அதிகாரத்தைத் தவிர வேறு அதிகாரத்தை நான் அங்கீகரிக்க

மாட்டேன். நான் இவ்வாறு சொல்லியதாக, உன்னை யனுப்பின சக்கரவர்த்தியிடம் போய்ச்சொல்" என்றார். என்னே இவருடைய துணிவும் தைரியமும்! இவரை உயிருள்ள வேதசாட்சியெனச் சொல்லலாம். மேற்கண்டவாறு சொல்லி யனுப்பிய பதிலுக்குக் கெய்ஸர் பிரதி பதில் ஒன்றும் அனுப்பாமல் சும்மாவிருந்துவிட்டாராம்.

சங். சூசைமரி தாயாரவர்களின் தேக வியோகம்.—சென்னை, வேப்பேரி அர்ச். பிலவேந்திரர் ஆலயத்தைச் சேர்ந்த இந்திய கன்னியர் மடத்தில் ஷெ தயாரவர்கள் விஷ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, கடைசித் தேவத் திரவிய அநுமானங்களைப் பெற்றுத் தம்முடைய 55-ம் பிராயத்தில் சென்றமீ 23-ம்வ மரணமான துக்கச் சமாசாரத்தை மிக்க விசனத்துடன் அறிவிக்கிறோம். சங். சூசைமரி தாயாரவர்கள் பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்து தேவ பயத்தில் வளர்க்கப்பெற்றுத் தம்முடைய 18-ம் பிராயத்தில், அதாவது, 1883-ம் ஆண்டில் தம்மைத் தேவ ஊழியத்துக்காக கையளிக்கும்படி ஷெ மடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். 1887-ம் ஆண்டில் தம்முடைய சபையின் வார்த்தைப்பாடுகளைக் கொடுத்து கன்னியாஸ்திரி பட்டம்பெற பாக்கியம்பெற்றார்கள். இவர்களிடத்தில் சிறந்துவிளங்கிய விவேகம், நேர்மை, கபடின்மை, தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பொறுமை, பிறர்மட்டில் அன்பு, வாஞ்சை ஆகிய இவை முதலிய சற்குணங்களைக் கண்ணுக்குக் கண்ணுய்க்கண்ட பெரியோர்கள் இவர்களை மடத்துக்குச் சிரேஷ்ட தாயாராக நியமித்தார்கள். தெய்வச் சித்தத்துக்கமைந்து தம்மேற் சுமத்தப்பட்ட பொறுப்புள்ள இவ்வலுவலை மிக்க பொறுமையுடனும் விமரிசையுடனும் 19 வருடங்களாக நிர்வகித்து வந்து, சென்ற ஆறு வருடங்களில் உதவி தாயாராக உழைத்துவந்தார்கள். இம்மடம் தற்காலம் அடைந்திருக்கும் விருத்திக்கும் மேம்பாட்டுக்கும் சங். சூசைமரி தாயாரவர்களே மூலமுங் காரணமுமென் போமானால் மிகையாகாது. இவர்களுடைய மரணமானது இம்மடத்துக்குப பெருத்த நஷ்டத்தை விளைவித்துவிட்டது. இம்மடத்தாருக்கு எமது உருக்கம் நிறைந்த அனுதாபத்தைச் சமர்ப்பிப்பதுடன் "நல்ல ஆயன்" சந்தாதாரர்களை வரையும் சங். சூசைமரி தாயாரவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மன்றாட்டு கேட்கப்பட்டது.—கடந்த ஐரோப்பிய யுத்த சம்பந்தமாய் பீல்டு மார்ஷால் வைக்கவுன்ட் ஆலன்பி என்னும் தளக்கர்த்தர் பலஸ்தீனு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, ஜெர்மன் துருக்கிய சேனைகளை முறியடித்துவிட்டு, ஜெருசலேம் பட்டணத்து மதில் சுவரண்டை நெருங்கி அதைத் தாக்கவேண்டியதாயிருந்த சமயத்தில், அந்தப் பரிசுத்த ஸ்தலத்தை நாசப்படுத்த மனஞ் சகியாதவராகி, தமது சேனாதிபதிக்குத் தந்தியடித்து ஜெருசலேம் நகரைத் தாக்குகிறதா என்னவென்று வினவினர். அதற்குச் சேனாதிபதி அவ்விஷயத்தில் உன்னுடைய சொந்த யுக்தப்படி நடக்க உத்தரவளிக்கிறேன் என பதிலளித்தார். அப்போதும் அக்காரியத்தைச்செய்ய மனந் துணியாமல், நமது மாட்சிமைதங்கிய அரசருக்குத் தந்திகொடுத்தார். அரசரோ, அவ்விஷயத்தில் எப்படி நடந்துகொள்வதென்பதைப்பற்றிச் சர்வேசுரனுக்குப் பிரார்த்தனை செய்துகொள் என விடையளித்தார். அவ்வாறே ஷெ தளபதி தமது சேனாவீரர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து அவர்களெல்லோருமாக இந்தச் சந்தர்ப்பத்தில் ஏது செய்வதென்பதைப் பற்றி தங்களுக்கு அறிவூட்டும்படிக் கடவுளை வேண்டிக்கொண்டதில், அவ்வேண்டுதல் முடிந்தும் முடியாமலுமிருக்கும் போதே, எதிரிசேனைத் தலைவனிடமிருந்து வந்த ஒரு தூதன் தாங்களெல்லோரும் சரணடையத் தயாராயிருப்பதாகத் தெரிவிக்குமோர் கடிதத்தைக் கொண்டுவந்தானும். இந்தச் செய்தி, சமீபத்தில் ஆஸ்டிரேலியாவில் ஒரு காங்கிரஸ் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த அந்நாட்டு கவர்னராகிய சர் ஹென்றி கால்வே என்னுந் துரை யவர்களால் சொல்லப்பட்டது. இது எவ்வளவு தூரம் மெய்யோ பொய்யோ என்பது துணியக்கூடவில்லை.

புது அரசியல் முறை.—இந்திய அரசியல் சீர்திருத்த விஷயமாய் இங்கிலாந்தில் பார்லிமெண்ட் கூட்டுக் கமிட்டியார்முன், சாட்சியம் கொடுத்துவிட்டுத் திரும்பிய அன்னிபெஸன்ட் அம்மையாரை, புது அரசியல் முறையைப்பற்றி அசோஷியேட்டட் பிரஸ் தந்திச்செய்து கம்பனியாரின் நிருபர் ஒருவர் சந்தித்துப் பேசியதில் அம்மையார் சொன்னது பின்வருமாறு:—கூட்டுக் கமிட்டியாரின் சிபார்சுகளைத் தழுவி வெளியாகியிருக்கிற இந்தியச் சீர்திருத்த மசோதா ஜனப்பொறுப்பாட்சியை நோக்கிச்செல்வதற்கு அனுகூலமாயிருக்கிறதென்பது எனது அபிப்பிராயம். ஆகவே அதை நான் அங்கீகரிக்கிறேன். இந்தச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு வேலை செய்யவேண்டும். இந்திய கவர்ன்மெண்ட் நிர்வாக சபையில் மூன்று இந்திய அங்கத்தினர்களிருப்பார்கள். இந்தியச் சட்ட சபையில் நூறு மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அதற்கு 40 மெம்பர்கள் நியமிக்கப்படுவார்கள். ஸ்டேட் கவுன்ஸிலில் 60 மெம்பர்களில் 40 பேர் நியமிக்கப்பட்டேனும் தெரிந்தெடுக்கப்பட்டேனும் உட்காருவார்கள். கவர்னர் ஜெனரல் ஜனங்களுக்குப் பிடிக்காத ஒரு சட்டத்தை நிறைவேற்றாதவாறு செய்வதற்கு இந்த வழி புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் ஒரு சட்டத்தை அவசரமான காரியத்திற்கென்று செய்துவிடலாம். அந்தச் சட்டம் பார்லிமெண்டாருக்கு அனுப்பப்பட்டு அரசர் பெருமானின் உத்தரவைப்பெறவேண்டும். ஆகவே இனி ரௌலட் சட்டம் போன்ற சட்டங்களைக் கவர்னர் ஜெனரல் செய்ய முடியாது. இங்கிலாந்தில் பிரிட்டிஷ் குடிகளுக்கு மேலாகப் பார்லிமெண்டாருக்கு என்ன அதிகாரமிருக்கிறதோ அதே அதிகாரத்தை இந்திய ஜனங்கள்மீது பார்லிமெண்டார் அதிகாரம்வகிப்பார்கள். இனி எதேச்சையாக ஆட்சி செய்யும் வழக்கமில்லாமற் போய்விடும். வியாபார வரி விதிக்க அதிகாரச் சுதந்தரம் குடியேற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்டிருப்பதுபோல் இங்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாகாண கவர்னர் நிர்வாக சபையில் ஓர் இந்தியரும் ஓர் ஆங்கிலேயருமிருப்பார். ஆனால் மாகாண நிர்வாக கவர்ன்மெண்டில் ஓர் ஆங்கிலேயருக்கு மூன்று இந்தியர்களிருப்பார்கள். இவர்களால் எல்லா விஷயங்களும் சேர்ந்து ஆலோசிக்கப்படும். ஆனால் ரிஸர்வ் இலாகா சம்பந்தமான விஷயங்கள் ஆலோசிக்கப்படும்பொழுது கவுன்ஸிலர்களுக்குக் கடைசி வோட்டிருக்கிறது. இதைக்கொண்டு அவர்கள் தங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொண்டுபோகலாமென்றாலும், அங்கிருக்கும் ஓர் இந்தியருக்கு வழி சொல்லவேண்டும். இந்திய மந்திரிகள் அலுவல் பார்க்கும் சம்பந்தமான விஷயங்களில் மூன்று இந்தியர்களிருக்கிறார்கள். இத்துடன் இவர்களுக்குப்பின்னால் சட்ட சபையொன்றிருக்கிறது. கவர்னர் மந்திரிகள் சொல்வதை அலட்சியம்செய்யலாமென்று அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர் சட்ட சபையை அலட்சியஞ்செய்யத் தயாராயிருக்கவேண்டும். அதாவது, சட்ட சபையை அலட்சியஞ்செய்து தம் இஷ்டப்படி காரியத்தைநடத்திக்கொள்ள கவர்னர் தயாராயிருந்தால் அவர் மந்திரிகளையும் கவனியாமலிருக்கலாம். சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள் புத்திசாலிகளாகவும் திறமைசாலிகளாகவுமிருந்தால், கவர்ன்மெண்டார் தம் இஷ்டப்படி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. கவர்ன்மெண்ட் செய்யும் காரியங்கள் ஜனங்களுக்கு நலமாகவே முடியும். இந்த மசோதா முழு சுய ஆட்சியை வழங்கவில்லை. ஆனால் இது அதற்கு வழியாயிருக்கிறது. இந்தியர்கள் இதை வைத்துக்கொண்டு இன்னும் கொஞ்ச வருஷங்களில் முழு சுய ஆட்சியை அடைய முயலவேண்டும். இவ்வளவு காலமாக நாம் கேட்டுவந்த சீர்திருத்தங்களான ஜனாசார முன்னேற்றம், நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் பிரித்தல், அச்சுச் சட்டத்தை ரத்துசெய்தல் அல்லது மாற்றல் முதலிய பல திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தத் துறைகளில் நம் தலைவர்கள் தங்களுடைய முயற்சிகளைச் செலுத்தலாம்.

கர்த்தர் பிறந்த குகை.—இது 40 அடிநீளமும் 12 அடி அகலமுமுள்ளதாய் இரவில் ஆடுமாடுகள், இடையர்கள் ஏழை வழிப்போக்கர் தங்க ஓர் சிற்றறையுமுள்ளதாம்,

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

வேம்பார்.

எங்களின் நேசத் தமயனார் ம. சவியேர் கித்தேரி கர்வால்ய தமது 33-ம் பிராயத்தில், விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டு எவ்வித சிகிச்சைகள் செய்தும் குணப்படாமல் கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள்யாவும் சரிவரப் பெற்று, இறுதி வேளையில். "சேசு மரி சூசை" என்னும் பரிசுத்த நாமங்களை இடைவிடாது உச்சரித்து தமது அன்பார்ந்த மனைவியையும், அருமைத் தாயையும், சகோதரர்களையும், "கண்ணை இமை காப்பதுபோல்" காத்துவந்த தமது இரண்டாம் சகோதரரின் மக்களிருவரையும் மற்றும் இதர இனபந்துக்களையும் இக்கண்ணீர்க்கணவாயில் ஏங்கித் தேங்கி அழ விட்டுவிட்டு, சென்ற மாதம் 20-ந் தேதி வியாழக்கிழமை பின்னேரம் ஐந்து மணிக்கு இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக் கேகி நித்திய இளைப்பாற்றியையடைந்தார். மறுநாள் காலையில் சங்கைவாய்ந்த பங்கு சுவாமியவர்களால் இவரின் சடலம் மந்திரிக்கப்பட்டு. தமதிரீத்துவத்தின் மூன்றுமாளாகிய திவ்ய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேஸ்வரன் தேவாலயத்திற்குக் கொண்டுபோய் ஒப்பீஸ் பாடியபின் தம்முடைய இனபந்துக்கள் புடைசூழ, மையவாடிக்குத் தூக்கிக்கொண்டுபோய் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. (இலங்காபுரியிலுள்ள கண்டி மாநகரிலும் இவருடைய ஆத்தும நித்திய இளைப்பாற்றிக்காக கனம்பொருந்திய கியூரி (**Rev. D. H. M. Chiorri O. S. B.**) சுவாமியவர்களால் ரெக்குயம் பூசை பாடப்பட்டது). இதை வாசிக்கும் எமது சகோதரர் சகோதரிகளே! இவ்வாத்தும நித்திய இளைப்பாற்றியை அடைய வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்குத் தமயனை இழந்து தத்தளிக்கும் சகோதரர்கள்,

ம. சவரியாரடிமைக் கர்வால்ய.
ம. மரியபாக்கியம் கர்வால்ய.
ம. தேவவஸ்தியம் கர்வால்ய.
ம. இஞ்ஞாசிக் கர்வால்ய.

16—12—19.

பூனா.

சென்னை பார்க்டவுண் புராதனவாசியும் தற்கால பூனா நிவாசராயுமிலங்கும் D. அப்புதாஸன் தெரிவிப்பது: எனது நேச மனைவியாகிய அன்னம்மாள் 1913௵ என்னைத் திருமணவாளனாய் மாங்கல்ய மாலையணிந்து சுமார் ஏழு வருடகாலமாய், இல்லறத்துக்கும் இனபந்தினருக்குமோர் கதிரவனைப்போல் ஜொலித்து, தன திளவயதில் கர்த்தனருளால் கண்மணி இரண்டு ஆண்மகவையும் ஓர் பெண்குழந்தையு மீன்று வாழ்ந்துவருங்கால், 1919௵ நவம்பர்௴ 17-ந் தேதியன்று (Malaria) மலேரியாவென்னும் விஷக்காய்ச்சல் கண்டு, அவுஷதங்களாலும் வைத்தியர்களாலும் குணப்படாமல் ஆத்தும காரியத்துக் கடுத்த கடைசி தேவத்திரவியாநுமானங்களைப்பெற்று சேசு மரி சூசையெனும் திருநாமங்களை ஓயாமல் பயபக்தியுடன் உச்சரித்து 1919-ம் வருஷம் நவம்பர் மாதம் 24-ந் தேதி திங்கட்கிழமை இரவு சுமார் பத்து மணிக்கு தனது இனஜன பந்துக்களும் கணவனும் கதறி புலம்பி யழும்படியாய்த் தானுசித்துக்கொண்டிருந்த கர்த்தரின் திருப்பாதவடியில்போய்ச் சேர்ந்தனள். இப்புண்யவதியின் சடலத்தை மறுநாள் சாயரட்சை ஏராளமான கிறீஸ்துவ சகோதரர்கள் சூழ்ந்து பின்தொடர திருச்சபையினுசாரப்படியே கல்லறையில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது. இதை வாசிக்கும் கத்தோலிக்குக் கிறீஸ்துவ சகோதரர் சகோதரிகளே! மரித்துபோன அன்னம்மாளுடைய ஆத்தும இளைப்பாறுதலுக்காக உங்கள் அநுதின ஜெபத்தில் மறவாது ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மிக்க விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,
மனைவியை யிழந்து மக்களோடு பரிதபிக்கும் பேதைச் சிறுவன்

டி. அப்புதாஸன்.

பழயகாயல்.

ஆறு வயதும் பூர்த்தியாகாத என் அருமைக் குமாரன் சேசையாப்பிலாவி பெர்னாந்து தான் மரிப்பதற்குப் பத்து நாளைக்குமுன் தனது மோக்ஷபிரயாணத்திற்குத் துணையாக உறுதிப்பூசுதல் பச்சாத்தாபம் நற்கருணையென்னும் தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்றும், தனது ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்தும் அர்ச். கர்மேல்மாதாவின் உத்தரியத்தையணிந்துமிருந்த நல்ல நாட்களில் கடந்த நவம்பர் மாதம் 18-ந் தேதி விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டு,எவ்விதசிகிச்சைக்கும்குணத்துக்குவராமல் வியாதி பெலப்பட்டு, ஜன்னிகண்டு, 19௳ இரவு ஒரு மணிக்கு எங்கள் கண்களை நீரா யோடச் செய்துவிட்டுத் தேவ சேனைகளுடன் சேர்ந்து தேவனுக்கு ஸ்துதிபுரியச்சென்றனன். அந்தோ பரிதாபம்! எங்கள் நேசக் குமாரன் மோக்ஷராச்சியத்திலிருப்பது மெய்யேயாயினும் எங்களிருதயத்தைக் கொள்ளைகொண்ட அவனை இழந்து பரதவிக்கும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளப் பணிவாய்ப் பிரார்த்திக்கும்

8—2—19. C. P. FERNANDO.

ஜெனனம் 3—2—14. மரணம் 19—11—19.

ஸ்ரீமான் J. L. பருனுந்து முராயிஸ் அவர்களின் நன்மரண அறிக்கை.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் முதன்மையான இந்த ஏஷியாகண்டத்தில் விசேஷ மகிமையும் சிறப்பும் செல்வாக்கும் பொருந்திய இப்பரதகண்டத்தை, ஒரு குடையிலாண்டு ஏக சக்ராதிபதியாக விளங்கிய பரதமகாராஜன் வம்சத்திற் தோன்றி, திருமந்திரநகரத்தில் சிறப்புடன் வாழ்ந்து, காலஞ் சென்ற பாரிய வர்த்தகரும், பிரபல வியாபாரியுமாகிய ம-ா.ா-ஸ்ரீ சின்னத்தம்பி பருணுந்து எட்வார்ஸ் அவர்களின் கனிஷ்ட புத்திரன் ஸ்ரீமான் நுசை லூவிஸ் பருனுந்து முராயிஸ் அவர்கள் நம் இந்துக்களால் பொன் விளையும் நாடென்று புகழப்படும் இலங்கையில் சகல வளங்களும் ஒருங்கே வாய்ந்து இதுவே "ஏதேன் தோட்டமென்று" பிரமிக்கச் செய்யும், அவ்வளவு செழிப்பும், அழகும் சிறந்த பேரும் பொருந்திய கிவ்ரேலியாவில் நெடுங்காலமாக வர்த்தகஞ் செய்துவரும் பாவுல் சோரீஸ் கம்பெனியில் உத்தியோகம் பார்த்து வருங்கால் 1919ம் வருடம் நவம்பர் மாதம் 30-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மத்தியானத்திற்குமேல் திடீரென்று தனக்குண்டான வயிற்றுநோயினால் மெத்த வருத்தப்பட்டு, அநேக பெரிய டாக்டர்களினால் கைவிடப்பட்டு மறுநாளாகிய டிசம்பர் மாதம் முதற் தேதி ஞான காரியங்கள் சகலமும் குறைவறப் பெற்று, சுமார் பகல் 11-மணிக்கு அவ்வூர் பங்கு சுவாமியாரும் மற்றும் உத்தம கிறீஸ்துவர்களும் பக்கத்திருக்க, ஆ! எமது இரக்ஷகர் உமது திருக் கரங்களில் என் ஆத்துமாவை ஒப்புக்கொடுக்கிறேன் என்ற அருமையான வாக்கை அநேக முறை யுச்சரித்து நன்மரணமானார்.

அந்தோ! அந்தோ!! இவ்விளவயது உத்தமனின் சடலம் மறுநாள் உதயம் 9-மணிக்கு மிக்கச் சிறப்போடு அநேக குருக்களும், மற்றும் உத்தம கிறீஸ்துவர்களாகிய ஆண் பெண் சகலரும் பின்செல்ல தேவாலயத்தில் வைத்துப் பாடல்பூசை நடத்தி கல்லறையில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்" என்ற வாக்கு இவ்வுத்தமனுக்கே யுரியது.

இவ்வருமை மகனை இழந்து பரிதபிக்கும் தாய்க்கும், சகோதரர், சகோதரிக்கும் கடவுள் நித்திய ஆறுதலைக் கொடுத்தருளவேணும். இஃதைக் கண்ணுறும் சகலரும் இவ்வாத்துமத்திற்கு ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சென்னை,
20ᵉ—12—19.

வயது 24.
R. I. P.

இங்ஙனம்,
ஓர் அனுதாபி.